வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු






Email : news@eelanadu.lk மலர் : 04 10.11.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 334 பக்கங்கள் : 12


# இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம்

## அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நம்பிக்கை

கொழும்பு, நவம்பர். 10

**இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**



உரிய நேரத்தில் தேர்தல்கள் இடம்பெறுவது ஜனநாயகத்துக்கு மிக அவசியமான விடயம் என தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாக இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் இடம்பெறும் என கூறினார்.

இலங்கையின் அரசமைப்பின்படி ஏனைய தேர்தல்களும் இடம்பெறும் என

11

# கிரிக்கெட் குழப்பத்தின் பின்னணியில் இந்தியா!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 10

இலங்கை கிரிக்கெட் சபையின் குழப்பத்தின் பின்னணியில் இந்தியாவின் ஆதிக்கம் உள்ளது. கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்க நிதியில்லை. ஆனால் கிரிக்கெட் சபையின் ஆலோசகராக பதவி வகிக்கும் மஹேல ஜயவர்தனவுக்கு மாதம் 27 ஆயிரம் டொலர் சம்பளம் வழங்க முடியுமா என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எதிரணியின் உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊழல்மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகார சபையின்

11

# கிரிக்கெட் சபை நிர்வாகத்தை உடனே பதவி நீக்கவேண்டும்!

## பிரேரணை சபையில் நிறைவேறியது

கொழும்பு, நவ. 10

இலங்கை கிரிக்கெட் சபையின் அலுவலகப் பொறுப்பாளர்களை நீக்குவது தொடர்பான கூட்டுப் பிரேரணை, அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளன.

நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் இந்த பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்படி, நேற்றுமுன்தினம் மாலை

11

# பொது போக்குவரத்துக்கான வாகன இறக்குமதி நிறுத்தம்!

கொழும்பு, நவ. 10

பொது போக்குவரத்து சேவைகளுக்கான வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட ஒரு மாத கால அவகாசம் நிறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

அனுமதி வழங்கப்பட்ட மாதத்துக்குள் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை விடுவிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

11

# சுவஸ்திகாவுக்கு சார்பான அறிக்கை மீளப்பெறப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை அடுத்து யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு சார்பாக வெளியிட்ட அறிக்கையை திரும்ப பெறுவதாக அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கம் "நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்" என்ற தலையங்கத்தில் உரையாற்ற இருந்தார்.

இந்நிலையில், இறுதி நேரத்தில் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் ஒரு சிலரின் தீர்மானத்தால் அவரது உரை இரத்து செய்யப்பட்டது.

11

# 13ஆவது திருத்தம் இலங்கைக்கு பலவந்தமாகத் திணிக்கப்பட்டது!

## முழுமையாக அமுல்படுத்த முடியாது என்கிறார் கெவிந்து குமாரதுங்க எம்.பி.

கொழும்பு, நவ. 10

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கைக்கு பலவந்தமாக திணிக்கப்பட்ட ஒன்றாகும். நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களும் அதில் உள்ளன. எனவே, '13' ஐ ஒருபோதும் முழுமையாக அமுல்படுத்த முடியாது என உத்தர லங்கா சபாகய அரசியல் கூட்ட ணியின் பிரதிச் செயலாளரும், யுதுகம அமைப்பின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகச்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் இலங்கைக்கு பலவந்தமாக திணிக்கப்பட்ட தொன்றாகும்.

11

# சப்ரகமுவ மாணவர் பேரணியை கலைக்க பொலிஸார் தாக்குதல்!

## 21 பேர் கைது செய்யப்பட்டனர்

கொழும்பு, நவ. 10

சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு பேரணியை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.

மருதானை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இந்த எதிர்ப்பு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் 21 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

சப்ரகமுவ பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் பிரிவுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

மருதானை ரயில் நிலையத்திற்கு அருகில் இருந்து பேரணியை ஆரம்பிக்க முயன்ற போது பொலிஸார் அதற்கு இடையூறு விளைவித்தனர்.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கு

11

# வரியை அதிகரிப்பதை தவிர அரசிடம் மாற்றுவழி உண்டா?

## கேள்வி எழுப்புகிறார் ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு, நவ. 10

வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. ஆனால், வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறைக்கான ஒரே தீர்வாக வரி விதிப்பை மாத்திரமே அரசாங்கம் முன்மொழிவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மக்களின் அத்தியாவசியப் பொருட்கள்

11

# மருத்துவர்கள் பற்றாக்குறையால் செயலிழக்கும் மருத்துவ பிரிவுகள்!

கொழும்பு, நவ. 10

வைத்தியர் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்ட, செயலிழக்கப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் விசேட வைத்திய பிரிவுகள் 432ஆக காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் செயலிழக்கவுள்ள வைத்தியசாலைகளும் இவற்றுள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இவற்றுள் 20 வைத்தியசாலைகள், வைத்தியர்கள் பற்றாக் குறை காரணமாக முழுவதுமாக மூடப்பட்டுள்ள நிலையில் மேலும் 44 வைத்தியசாலைகள் வைத்திய நிபுணர்கள் இன்றி துணை வைத்தியர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் நடைமுறைப் படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

மேலும், விசேட வைத்தியர்கள்

11

# இப்படியும் நடக்கிறது

கடந்த சில நாட்களாக சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்படுகின்ற ஒரு விடயம் தொடர்பாக இங்கே போசாமல் நகர்ந்து செல்வது சரியானதாக இருக்காது.

எமது சகோதர ஊடகமான டான் ரிவியில் மாணவர்களிடையே பேச்சாற்றலை வளர்க்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வரும் ஒரு விவாத நிகழ்ச்சி பற்றியே சில நாட்களாக பலரும் பேசி வருகின்றனர்.

அந்த நிகழ்ச்சியில் வாரம் ஒரு தலைப்பில் பாடசாலை மாணவர்களிடையே - அதிலும் குறிப்பாக இரண்டு பாடசாலை மாணவர்களிடையே 'சொற்சமர்' என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சி கடந்த ஏழு வருடங்களாக தொடர்ச்சியாக வாரம் தோறும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

வாரம் ஒரு தலைப்பில் மூன்று மூன்று மாணவர்களாக ஆறு மாணவர்கள் கலந்து கொண்டு தமது வாதத்திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கடைசியாக நடைபெற்ற நிகழ்ச்சியில் 'இன்றைய இளைஞர்கள் தலையில் வைத்துக் கொண்டாடுவது தலையா? தளபதியா?' என்ற தலைப்பில் விவாதிக்கப்பட்டது. அதுவே இன்று பலரையும் 'பொங்கி எழ' வைத்திருக்கின்றது.

தலைப்பை பார்த்ததும், மாணவர்களிடையே இப்படியொரு தலைப்பு தேவையா என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லைதான்.

தொலைக்காட்சிகளில் தொலைபேசி ஊடாக நேயர்கள் கலந்துகொண்டு தமக்கு விரும்பிய பாடல்களைக் கேட்கின்ற நிகழ்ச்சிகளில், தாய்மார் தொலைபேசி அழைப்பை எடுத்து கதைத்துவிட்டு தமது சிறுபிள்ளைகளை பேசக் கொடுத்து அவர்களை பாடல்கள் கேட்கச் சொல்கின்றபோது, அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கின்றபோது, ஏன் இந்த தாய்மார் பிள்ளைகளுக்கு சினிமா மோகத்தை ஏற்படுத்துகிறார்கள் என்று ஊர்க்குருவி நினைப்பதுண்டு.

ஆனால், மாணவர்கள் இப்படியொரு தலைப்பில் விவாதிக்கவேண்டுமா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததுதான்.

ஆனால், இன்று இந்த நிகழ்ச்சி பற்றி சமூக வலைத்தளங்களில் 'பொங்குபவர்கள்' யாரும் அந்த நிகழ்ச்சியை பார்த்திருக்கமாட்டார்கள். அப்படி பார்த்திருந்தால், இந்த தலைப்பைக் கொடுத்தபோதிலும், மாணவர்கள் அந்த நடிகர்களில் எவர் தனது ரசிகர் மன்றம் மூலம் மக்களுக்கு அதிக சேவை செய்கிறார் என்பது குறித்தும், அதனால்தான் இளைஞர்கள் அவர்களை தலையில் வைத்து கொண்டாடுகிறார்கள் என்றும்தான் வாதிட்டனர் என்பதை கண்டிருப்பார்கள். என்ன தலைப்பை தந்தாலும் நாங்கள் மாணவர்கள், சமூகம் சார்ந்துதான் எங்கள் பார்வையை முன்வைக்கின்றோம் என்பதை அந்த மாணவர்கள் வெளிப்படுத்தியதை யாரும் கண்டுகொண்டதாக தெரியவில்லை.

அறுபது வருடங்களுக்கும் மேலாக உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கும் ஓர் இனத்தின் தலைவர்கள், எமது பிரச்னைகளுக்காக போராடுவதற்கு அழைப்பு விடுக்கின்றபோது கண்டுகொள்ளாத இளைஞர்கள், சென்னையில் இருந்து சினிமா செய்கின்ற விஜய்க்காக யாழ்ப்பாணத்தின் கஸ்தூரியார் வீதியில் உள்ள ராஜா தியேட்டருக்கு ஆயிரக்கணக்கில் திரள்கிறார்கள் என்றால், அது எதனால் நடக்கின்றது என்பது குறித்து இதுவரை யாரும் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

கடந்த 19ஆம் திகதி விஜய் நடித்து வெளிவந்த திரைப்படம் வெளியிடப்பட்ட ஒரு வார காலம் அந்த வீதியால் வாகனங்கள் போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு இளைஞர்கள் திரண்டார்களே அது எதனால் நடந்தது என்பதை இதுவரை யாரும் ஆய்வுக்கு உட்படுத்தவில்லையே.

அதிகம் ஏன் அண்மையில் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சி நடந்தது. அதுகும் சினிமா கலைஞர்கள் கலந்து கொண்டு குத்தாட்டம் போட்ட நிகழ்ச்சிதான். எத்தனை வி.ஐ.பிகள் தமது பிள்ளைகளுடன் அமர்ந்திருந்தார்கள். பெற்றோர் தமது பிள்ளைகளுடன் ஆயிரக்கணக்கில் கூடினார்களே. அதுகும் அண்ணளவாக இருபது கோடி செலவில் அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர் எதற்காக செய்தார் என்பது இன்று வரை யாருக்கும் தெரியாது. ஒருவர் இதுபோன்ற நிகழ்ச்சிகளை செய்தால் தானே அதனைச் செய்தேன் என்று பெருமை பேசுவதற்காகவாவது மேடையில் தோன்றியிருப்பார். அல்லது 'கோப்பறேட்' நிறுவனங்களின் அனுசரணையையாவது பெற்று செலவை கவனித்திருப்பார்கள். ஆனால் அது யாரால் எதற்காக நடத்தப்பட்டது என்பது இன்றுவரை யாருக்கும் தெரிந்திருக்குமோ தெரியவில்லை. ஆனால் நிகழ்ச்சி முடிந்த பின்னர் சமூக வலைத்தளங்களில் அதனை புகழ்ந்து தள்ளினார்கள். அந்த நிகழ்ச்சிக்கு விஜய் வந்திருந்தால், யாழ்ப்பாணத்தை கட்டுப்படுத்தியிருக்க முடியுமா என்பது தெரியவில்லை.

அண்ணளவாக நாநூறு தலைப்புக்களில் மாணவர்கள் இதுவரை சொற்சமர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறார்கள். அதில் கலந்துகொண்ட பல மாணவர்கள், நாடளாவிய ரீதியில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு முதலிடங்களைப் பெற்றிருக்கின்றனர். அவ்வாறு தாம் வெற்றி பெறுவதற்கு அந்த நிகழ்ச்சியே காரணம் என்றும் அவர்கள் பின்நாட்களில் பதிவு செய்திருக்கின்றனர்.

பட்டிமன்றம் என்றால் கண்ணகியா மாதவியா கற்பில் சிறந்தவள் என்ற தலைப்பிலும், செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பது கர்ணனா கும்பகர்ணனா என்ற தலைப்பில் மட்டும்தான் பேசவேண்டும் என்று நினைக்கிறார்களோ என்னவோ?

**-ஊர்க்குருவி.**

# இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை அண்மித்த பகுதிகளில் இராணுவம்!

கொழும்பு, நவ.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகளுக்கு எதிராக நடத்தத் தயாராக இருந்த ஆர்ப்பாட்டங்களை தடுக்கும் வகையில், கொழும்பிலுள்ள இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு நுழையும் வித்யா மாவத்தையை வீதித் தடைகளைப் பயன்படுத்தி தற்காலிகமாக மூடுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில், கிரிக்கெட் நிறுவனம் முன்பு பொதுமக்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் பெருந்திரளாக நின்று கொண்டிருந்தனர்.

கிரிக்கெட் நிறுவன நுழைவு வாயில் அருகே விளையாட்டு இரசிகர்கள் தேசியக் கொடியை ஏந்தியும், கோஷங்கள் எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலைமைகள் காரணமாக கிரிக்கெட் நிறுவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், கலகத் தடுப்புப் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் இராணுவமும் அழைக்கப்பட்டிருந்தன. (அ)

# கிரிக்கெட் இடைக்கால குழுவுக்கு அரசியல்வாதிகளின் புதல்வர்கள்

## முறையற்றது என்கிறார் விஜித ஹேரத்

கொழும்பு, நவ. 10

ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்குள்ளான நிறைவேற்று குழுவை நீக்கி இடைக்காலக் குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்தமை வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த குழுவுக்கு நீதியமைச்சரின் மகன், ஆளுநர் ஒருவரின் மகன் நியமிக்கப்பட்டுள்ளமை முறையற்றது. விளையாட்டுத் துறை அமைச்சர் உண்மை நோக்கததுடன் இடைக்கால குழுவை நியமித்தார். ஆனால் ஒரு தரப்பினர் இந்த இடைக்கால குழுவை கொண்டு பிறிதொரு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகார சபையின் தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய சட்ட கட்டமைப்பை சட்டமூலம் ஊடாக அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி ஒன்றும் புதிதல்ல, காலம் காலமாக மோசடி இடம்பெறுகிறது. கிரிக்கெட் சபையின் நிர்வாகிகள் அரசியல்வாதிகளுக்கும்,



நிதிக்கும் அடிபணிந்து துறையின் அடிப்படை கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுகிறார்கள்.

கிரிக்கெட் சபையின் மோசடி மாபியாக்களினால் விளையாட்டு வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இலங்கை கிரிக்கெட் அணி சர்வதேச மட்ட போட்டிகளில் தோல்வியடைந்ததை தொடர்ந்து விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடியை பகிரங்கப் படுத்தியுள்ளார். பாராளுமன்றத்தின் ஊடாக அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி தொடர்பில் கோப் குழுவில் பலமுறை விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கோப் குழுவுக்கு முன்னிலையாகுமாறு கிரிக்கெட் சபைக்கு பலமுறை அழைப்பு விடுக்கப்பட்ட போதும் "கோப் குழுவுக்கு முன்னிலையாகும் பொறுப்பு தமக்கு இல்லை" என கிரிக்கெட் சபையின் நிறைவேற்று குழுவினர் தட்டிக்கழித்தனர். அதன் பின்னர் சட்ட விளக்கம் வழங்கியதன் பின்னரே அவர்கள் கோப் குழுவுக்கு முன்னிலையாகினர்.

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி தொடர்பில் கோப் குழு பல பரிந்துரைகளை முன்வைத்தது. ஆனால் அவை செயற்படுத்தவில்லை.

துரதிஷ்டவசமாக ஆட்சி மாற்றம் இடம்பெற்றது. கோப் குழு கலைக்கப்பட்டது. நாட்டில் குடும்ப ஆட்சி நிலவுவதை போன்று கிரிக்கெட் சபையிலும் குடும்ப நிர்வாகம் இடம்பெறுகிறது. சுமதிபால குடும்பம், தர்மதாஸ குடும்பம், ரணதுங்க குடும்பம் ஆகியோரே கிரிக்கெட் சபையை நிர்வகித்தார்கள்.

ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்குள்ளான நிறைவேற்று குழுவை நீக்கி இடைக்கால குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்தமை வரவேற்கத்தக்கது.

ஆனால் இந்த குழுவுக்கு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் மகன், ஆளுநர் ஒருவரின் மகன் நியமிக்கப்பட்டுள்ளமை முறையற்றது. விளையாட்டுத்துறை அமைச்சர் உண்மை நோக்கததுடன் இடைக்கால குழுவை நியமித்தார். ஆனால் ஒரு தரப்பினர் இந்த இடைக்கால குழுவை கொண்டு பிறிதொரு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்கள்- என்றார். (அ)

# வீடுகள் உடைத்து திருடிய குற்றச்சாட்டில் அதிரடிப்படை முன்னாள் சிப்பாய் கைது!

கொழும்பு, நவ. 10

கொட்டாவ மற்றும் மாலபே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரண்டு வீடுகளை உடைத்து, பெறுமதியான மாணிக்கக் கற்கள் மற்றும் தங்கம் உட்பட பதி னைந்து இலட்சம் ரூபாவுக்கும் அதிக மான உடைமைகளைத் திருடிய சந்தேகத்தில் விசேட அதிரடிப்படை முன்னாள் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டதாக கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவ வித்தியால சந்தி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கொட்டாவ தெல்கஹவத்த பிரதேசத்தில் வீடொன்று உடைக்கப்பட்டு மாணிக்கக் கற்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கொட்டாவ பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே இவர் கைது செய்யப்பட்டார். (அ)

யாழ்.நகரில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

மின்னஞ்சல்: Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
10.12.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## தலைவர்களுக்கு செவிமடுக்கும் பண்பு அவசியம்

யுத்தம் முடிவுற்று பதின்னான்கு ஆண்டுகள் சென்றுவிட்டன. இந்தக் காலத்தில் பல்வேறு அரசியல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறான செயல்பாடுகள் உள்ளூர் மட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டன - அதேவேளை, வெளியிலும் முன்னெடுக்கப்பட்டன. இந்திய, அமெரிக்க ராஜதந்திர சந்திப்புக்கள் பலவும் இடம்பெற்றிருக்கின்றன. ஆனாலும் தமிழ் மக்கள் இருக்கின்ற நிலையிலிருந்து, முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. இதனை எந்தவோர் அரசியல் தலைவராலும் மறுதலிக்க முடியாது. இந்த விடயத்தில் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டலாம் - ஆனால், இறுதியில் அனைவருக்கும் தோல்வி என்பது மட்டும்தான் உண்மை.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது - அதனை சாதகமாகப் பயன்படுத்துவது தொடர்பில், மாற்றுக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அவற்றை கருத்தில் கொண்டு சிந்திக்கும் நிலையில் சம்பந்தன் இருக்கவில்லை. ஒரு புதிய அரசியல் யாப்பின் மீதான நம்பிக்கை பொருத்தமானதல்ல - அதற்கு மாறாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் நிலைப்பாடே சரியானது - அதற்கான உதவியை இந்தியாவிடம் கோரலாம் - என்னும் அபிப்பிராயம் முன்வைக்கப்பட்டது. அரசியல் என்பது எப்போதுமே சாத்தியங்களின் கலையென்று நம்பும் புத்திஜீவிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் அவ்வாறான கருத்தை உறுதியாக முன்வைத்தனர். ஆனால், அவை எவற்றையும் சம்பந்தன் மற்றும் அவரது பாதடிச் சுவட்டைப் பின்பற்றியவர்கள் சிறிதும் கவனத்தில் எடுக்கவில்லை.

தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில் காலத்திற்கு காலம் இவ்வாறான அரசியல் யதார்த்தங்களை சொல்லக் கூடியவர்கள் இருந்திருக்கின்றனர் ஆனால், அவர்கள் எப்போதும் எண்ணிக்கையில் குறைவானவர்களாகவும் ஊடக பலமில்லாதவர்களாகவும் இருந்தனர். யதார்த்தவாதி வெகுசன விரோதி - என்பது போல், அவர்களின் யதார்த்தமான குரல்கள் தமிழ் தேசியவாத அரசியல் அலையால் சாதாரணமாக அடித்துச் செல்லப்பட்டது.

இப்போதும் கூட, நமது அரசியல் தலைவர்கள் என்போர், மற்றவர்களை செவிமடுக்கும், பரஸ்பர நட்புறவுடன் விடயங்களை எடைபோடும், தவறுகளை ஒப்புக்கொள்ளும் பண்பை வெளிப்படுத்துவதற்கு தயங்குபவர்களாகவே இருக்கின்றனர். 40 வருட அனுபவமுள்ள எங்களுக்கு இவர்கள் எதைச் சொல்வதென்று, தங்களை நோக்கிவரும் கருத்துக்களை புறக்கணிக்கவே முயற்சிக்கின்றனர்.

எவரேனும் அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள முற்படும் போது, அவர்களை பலவீனப்படுத்தும் வகையிலான போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு யாரோ நிதியளிப்பதான, போலியான கதைகள் புனையப்படுகின்றன. உண்மையில் தமிழ் தேசியத அரசியல் பரப்பில், திட்டமிட்டு செயல்படுவதற்கான எந்தவோர் அவசியமும் வெளிநாடுகளுக்கு இல்லை. ஏனெனில் அந்தளவுக்கு கருத்தில்கொள்ளத்தக்க அரசியல் கட்டமைப்புடன் தமிழர் தரப்பு இல்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவரீதியில் பலமாக இருந்த காலத்தில் வேண்டுமானால் அவ்வாறான தேவைகள் இருந்திருக்கலாம்.

எனவே இனியாவது தமிழ் தேசியவாத தலைவர்கள் என்போர் மாற்றுக் கருத்துக்களை செவிமடுக்கும் பண்பை வெளிப்படுத்த வேண்டும். தங்கள் மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களை எதிரி மனோபாவத்துடன் நோக்குதல் கூடாது. அதனால், ஒருபோதுமே, அரசியலில் முன்னோக்கி பயணிக்க முடியாது. அரசியல் யதார்த்தங்களை செவிமடுக்காமையே, கடந்த பதின்னான்கு வருடகால அரசியல் நகர்வில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எதனையும் அடைய முடியவில்லை என்னும் உண்மையை செவிமடுப்பதே, இனிவரும் காலத்தை கையாள்வதற்கான பால பாடமாகும்.

### வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள் ."*

**- ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)**



# கவனிப்பாரின்றி கிடக்கும் ஒரு கரவெட்டி வீதி

வடமராட்சி கரவெட்டியில் முக்கியமான வர்த்தக மையமாக வளர்ந்து வரும் நெல்லியடி நகருக்கு மிகவும் அருகாமையில் இருக்கும் சாமியன் அரசடி சந்தியில் இருந்து தெற்கு நோக்கி சோனப்பு மயானவெளிக்கு செல்லும் சுமார் ஒரு கிலோ மீட்டர் வீதி சில வருடகாலமாக செப்பனிடப்படாமல் இருப்பதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கவேண்டியிருக்கிறது.

இந்த வீதியில் இரு வைத்தியசாலைகள் இருக்கின்றன. இரு முக்கிய பாடசாலைகளுக் கும் தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆல யத்துக்கும் இந்த வீதியூடாகவே செல்லவேண் டும்.



கோடை காலத்திலேயே மோசமான நிலை யில் காணப்படும் இந்த வீதியில் மாரி காலத் தில் மக்கள் அறவே பயணம் செய்ய முடியாத அளவுக்கு ஆங்காங்கே வெள்ளநீர் தேங்கி போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலாக இருக்கிறது.

வீதியைச் செப்பனிடப்படுவதற்காக முன் னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் சிலரின் இடை யூறுகள் காரணமாக நிறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. குண்டும் குழியுமாக காணப்படும் இந்த வீதிக்கு சமாந்தரமாக இருக்கும் பல வீதி கள் செப்பனிடப்பட்டு வருகின்ற போதிலும் இதை செப்பனிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதி காரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கரவெட்டி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கரவெட்டி உடுப்பிட்டி தேர்தல் தொகுதியின் முக்கிய பகுதியாகும். யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேரில் நான்கு பேர் உடுப்பிட்டி தொகுதியைச் சேர்ந்தவர்களா வர். அவர்கள் இது விடயத்தில் உடன்டிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படு வதை உறுதிசெய்யவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த வீதியை செப்பனிடுவதற்கு முட் டுக் கட்டையாக இருக்கும் காரணிகளை அடையாளம் கண்டு களைந்து பணிகள் துரிதமாக முன் னெடுக்கப்படவேண்டும். அதேவேளை பகுதி மக்களும் பொதுநலன் கருதி ஒன்றுபட்டு தங்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

**- பாலன்**

# யாழ். போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத 3 சடலங்கள்!

யாழ்ப்பாணம், நவ. 10


யாழ்.போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத நிலையில் மூன்று சடலங்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டு உள்ளதாகவும், அதனை உறவினர்கள் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.எஸ். யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 22ஆம் திகதி விடுதி இலக்கம் 34 இல் அனுமதிக்கப்பட்டவரின் பெயர், வயது, இடம் என எந்த தகவலும் இல்லாத பெண்ணொ ருவரின் சடலமும், கடந்த 23ஆம் திகதி தெல்லிப்பழை பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்ட உரும்பிராய் பகுதியை சேர்ந்த திருமதி ரு.கிரிஷாந்தன் எனும் பெண்ணின் சடலமும் , கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி விடுதி இலக்கம் 08 இல் உயிரிழந்த சின்னக்கடை பகுதியை சேர்ந்த நல்லூரராஜ் (வயது 63) ஆகியவர்களின் சடலங்களே உரிமை கோரப்படாத நிலையில் உள்ளன.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் சடலங்களை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு பிரதி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. சவீட்டை விரிவு படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்பு கள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப் பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப் பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்று கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட் டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கள் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

**துலாம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வியா பாரத்தில் வேலையாட்களுடன் விவாதம் வேண் டாம். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவது நல்லது. மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். ஊழியர் கள் பாராட்டுவார்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**தனுசு**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியா பாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். உயர திகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள்.

**மகரம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர் கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உங்களைப் பற்றிய வதந்திகள் வரும். பொறுப்பு ணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்கு வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுக மாவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்

# 6 மாவட்டங்களில் பாடசாலை விடுமுறை

சென்னை, நவ. 10

மழை காரணமாக மதுரை, கோவை, நீலகிரி, திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட பள்ளிகளுக்கு மட்டும் நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இந்த உத்தரவை அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் அறிவித்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், குந்தா, கோத்தகிரி தாலுகாக்களில் மட்டும் கல்லூரிகளுக்கும் நேற்று விடுமுறை அளிக்கப்பட்டதாக மாவட்ட கலெக்டர் அருணா அறிவித்துள்ளார்.

மதுரை மாவட்டத்தில் நேற்று முன் தினம் இரவு முதல் பரவலாக மழை பொழிவு பதிவானது. இதன் காரணமாக மதுரையில் நேற்று பள்ளிகளுக்கு விடுமுறை என அறிவித்துள்ளார் மாவட்ட ஆட்சியர் சங்கீதா.

இதே போல கோவை மாவட்டத்திலும் மழை காரணமாக பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பட்டமளிப்பை புறக்கணித்தார் பொன்முடி

சென்னை, நவ. 10

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தின் 14ஆவது பட்டமளிப்பு விழா நேற்று முந்தினம் நடைபெற்றது. இவ்விழாவில் ஆளுநர் ஆர்.என். ரவி பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்நிலையில், தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி பங்கேற்காமல் புறக்கணித்தார் என தகவல் வெளியாகியுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்க ஒப்புதல் வழங்காத கவர்னரை கண்டித்து, மதுரை காமராஜர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிலும் அமைச்சர் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வருமான வரிச் சோதனையை பார்த்து நாம் அஞ்சமாட்டோம்

## அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்

சென்னை,நவ. 10

வருமான வரி சோதனையை பார்த்து நாங்கள் அஞ்ச மாட்டோம். எனது வீடு, மனைவி வீடு, மகன்கள் வீட்டில் ஒரு பைசா பறிமுதல் செய்திருந்தாலும், அதற்குப் பொறுப்பேற்று பதில் சொல்லத் தயார் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

அமைச்சர் எ.வ.வேலுவின் வீடு,கல்வி நிறுவனங்கள் மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களுக்குச் சொந்தமான இடங்களில் கடந்த 5 நாட்களாக வருமான வரி சோதனை நடைபெற்றது. திருவண்ணாமலையில் இரவு சோதனை நிறைவடைந்ததையடுத்து, மாவட்ட தி.மு.க அலுவலகத்தில், தனது மகன்கள் குமரன், கம்பன்ஆகியோருடன் செய்தியாளர்களை சந்தித்தார் அமைச்சர் எ.வ.வேலு. அப்போது அவர் கூறியதாவது:

வருமான வரித் துறை அதிகாரிகளை நான் குறை கூறமாட்டேன். சோதனை நடத்துவது அவர்களது கடமை. அவர்களை ஏவியவர்கள் எங்கோ உள்ளனர். எனது நேர்முக உதவியாளர் சுப்பிரமணி, கார் ஓட்டுநர் ஆகியோரை 4 நாட்களுக்கு தனிமைப்படுத்தி, அச்சுறுத்தி, விசாரணை நடத்தியுள்ளனர். எனது கல்லூரி, வீடு என அனைத்து இடங்களிலும் சோதனை நடத்தியதுடன், கல்லூரி அலுவலர்களையும் விசாரித்தனர். 2021 இல் திருவண்ணாமலையில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றபோது சோதனை நடத்தி,எனது தேர்தல் பணியை 2 நாட்களுக்குத் தடுத்தனர்.

நான் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன். திருவண்ணாமலைக்கு வந்து அச்சகம் நடத்தினேன். பின்னர், லாரி தொழில் செய்தேன். திரைப்பட விநியோகிஸ்தர், தயாரிப்பாளராக இருந்துள்ளேன்.அப்போது சம்பாதித்த பணத்தைக்கொண்டு, எனது தாய் சரஸ்வதிஅம்மாள் பெயரில் அறக்கட்டளை தொடங்கினேன். தொடர்ந்து, பல கல்லூரிகளை தொடங்கினேன்.6 முறை எம்எல்ஏ. நானும், எனது மகன்களும், மனைவியும் வருமான வரி செலுத்தி வருகிறோம்.

என்னிடம் கோரிக்கைகளை கூற வந்த திமுகவினரிடமும் சோதனைநடத்துவது நியாயமா? அதிகாரிகள் திமுகவைச் சேர்ந்தவர்களிடம் மட்டுமே சோதனை மேற்கொள்கின்றனர். ஆனால், இதற்கெல்லாம் நாங்கள் பயப்படமாட்டோம். எனது கட்சி, அரசுப் பணிகளை கடந்த 5 நாட்களாக முடக்கி உள்ளனர். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, எதிர்க்கட்சியினரை அச்சுறுத்த வருமான வரித் துறையை பயன்படுத்துகின்றனர்.

எனது வீடு, மனைவி வீடு, எனது பிள்ளைகள் வீடு, கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற சோதனையில், ஒரு பைசா பறிமுதல் செய்திருந்தாலும்கூட, நான் அதற்குப் பொறுப்பேற்று, பதில் சொல்லத் தயாராக உள்ளேன்- என்றார். (அ)

# தமிழகத்தில் பா.ஜ.க ஆட்சிக்கு வராது என்ற தைரியத்தில் பேசுகின்றார் அண்ணாமலை

## கூறுகிறார் திருமாவளவன்



சென்னை, நவ. 10

தமிழகத்தில் பாஜக ஆட்சிக்கு வராது என்ற தைரியத்தில் அண்ணாமலை வாக்குறுதிகளை அளித்து வருகிறார் என எம்.பி திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் வெ.விரகாலூர் கிராமத்தில் அக்.9-ம் தேதி நாட்டு வெடி தயாரிப்பு ஆலையில் நிகழ்ந்த வெடி விபத்தில் 12 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர்.

இந்த வெடி விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த வெ.விரகாலூர் அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினரை விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும், சிதம்பரம் எம்.பியுமான திருமாவளவன் நேற்று சந்தித்து, ஆறுதல் கூறி, 6 குடும்பத்தினருக்கு தலா ரூ.10,000 வீதம் நிதியுதவி வழங்கினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்-

வெடி விபத்தை தவிர்க்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு தான் வருகிறது. ஆனாலும், சில இடங்களில் இதுபோன்ற விபத்துகள் நிகழ்வது வேதனை அளிக்கிறது. அரசு இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பாஜக தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தால் இந்து சமய அறநிலையத் துறை நீக்கப்படும்.

ஸ்ரீ ரங்கம் கோயில் முன்புள்ள பெரியார் சிலை அகற்றப்படும் என பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை பேசி வருகிறார். தமிழகத்தில் பாஜக ஆட்சிக்கு வர வாய்ப்பில்லை என்பதை தெரிந்து, ஆட்சிக்கு வராது என்ற தைரியத்தில் அண்ணாமலை பல்வேறு வாக்குறுதிகளை அளித்து வருகிறார்-என்றார்.

# நாட்டை விட்டு வெளியேற 5000 வைத்தியர்கள் தயார்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்



**கொழும்பு, நவ. 10**
**நாட்டிலுள்ள 5000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற தயாரான நிலையில் உள்ளனர் என்றும் இதனால் எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியிலும் 95 வைத்தியசாலைகளை மூட நேரிடும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு வருடம் எனும் மிககுறுகிய காலப்பகுதியில் சுமார் 1500 விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு இறுதியில் நாட்டில் இருந்த ஒட்டுமொத்த வைத்தியர்களில் 5 வீதமானோர் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

மேலும் 5000 வைத்தியர்கள் வெளிநாடு செல்வதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துகொண்டு வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஆகவேதான் வைத்தியர்களின் பொருளாதார நிலையை சீர் செய்து வைத்தியர்களை நாட்டில் தக்க வைத்துக்கொள்வதற்கான சூழலை உருவாக்குவது மிக அவசியம் என்று நாங்கள் நினைக்கின்றோம்.

வெளிநாடுகளுக்கு செல்ல இருக்கும் இந்த 5000 வைத்தியர்களை நாட்டில் தக்கவைத்துக் கொள்ள நடவடிக்கை எடுங்கள்.

இந்த 5000 வைத்தியர்கள் நாட்டின் வைத்தியத்துறைக்கு இல்லாமல் போனால் ஒட்டுமொத்த வைத்தியதுறையில் 25 வீத வைத்தியர்களுக்கான இழப்பு இந்த நாட்டுக்கு ஏற்படும்.

நாட்டில் தற்போது நிலவுகின்ற வைத்தியர் பற்றாக்குறையின் காரணமாக நாடளாவிய ரீதியிலும் 20 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

அதேநேரம் நாடளாவிய ரீதியிலும் 44 வைத்தியசாலைகள் பட்டதாரி மருத்துவர்கள் இன்று பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களை கொண்டு இயங்குகின்றன.

இவ்வாறு மருத்துவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று அல்லது மருத்துவர்கள் மருத்துவத் துறையை விட்டு விலகினால் எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியிலும் 95 வைத்தியசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறான பிரச்னைகளுக்கு உரிய முறையில் தீர்வை பெற்றுக்கொடுக்கவில்லை எனில் எதிர்காலத்தில் ஏற்படும் பாரதூரமான பிரச்னைகளுக்கு நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம் என்ற எச்சரிக்கையையும் நாங்கள் முன்வைக்கின்றோம்-என்றார். (அ)

# இஸ்ரேலில் உயிரிழந்த மற்றைய இலங்கையரின் உடலும் வந்தது!



கொழும்பு, நவ. 10

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் உயிரிழந்த இரண்டாவது இலங்கையர் சுஜித் யாதவர பண்டாரவின் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று காலை விமானத்தில் இஸ்ரேலில் இருந்து டுபாய்க்கு அனுப்பப்பட்ட பின்னர் இறந்த இலங்கையரின் உடல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

சுஜித்தின் சடலம் கட்டுநாயக்க விமான நிலையத்தின் விமான சரக்கு முனையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இது நேற்று காலை 8.37 அளவில் இலங்கையை வந்தடைந்துள்ளது.

உடல் ஒப்படைக்கப்பட்ட போது, சுஜித் யத்வார பண்டாரவின் மனைவி ஜயனி மதுவந்தி, 13 வயது மகள், 9 வயது மகன், இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார, முன்னாள் அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விமான நிலைய நிர்வாக அதிகாரி அசோக பிரேமசிறி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த சடலத்தின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை வென்னப்புவ - துலாவெல பிரதேசத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மேற்கொள்ளப்படும். (அ)

# சூனியம் உள்ளதாக கூறி வர்த்தகர்களிடம் மோசடி!

## யாழ். பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணத்தில் செல்வந்தர்களை இலக்கு வைத்து நபரொருவர் பணமோசடியில் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நபரொருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வந்தர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு "உங்களுக்கு செய்வினை வைக்கப்பட்டுள்ளது. உங்கள் வளர்ச்சியில் பொறாமை கொண்டவர்கள் உங்களுக்கு செய்வினை செய்து சூனியம் வைத்துள்ளார்கள். அந்த செய்வினையை உடனே அகற்ற வேண்டும். இதனை எனது ஞான திருஷ்டியால் அறிந்து கொண்டேன். நான் ஒரு மாந்திரீகவாதி என்னால் மட்டுமே அதனை அகற்ற முடியும்" எனக் கூறி அவர்களுக்கு நம்பிக்கை வரவைத்து பணமோசடியில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கு அவரின் பெயர் விவரங்கள் தெரியாததாலும், சிலர் தமது அந்தஸ்து கருதி முறைப்பாடு செய்ய முன் வராததாலும் அந்த நபரின் ஏமாற்று வேலைகள் தொடர்ந்து கொண்டே செல்வதாகவும், எனவே இது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கிராஞ்சியில் கடலட்டை பண்ணை அமைப்பதற்கு பலர் விண்ணப்பம்!

## கடற்றொழிலாளர் சங்க செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

கிராஞ்சி பகுதியில் கடலட்டைப் பண்ணை அமைக்கப் பலரும் விண்ணப்பித்துள்ளனர் கிராஞ்சி ஸ்ரீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த.மகேந்திரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடலட்டை பண்ணைக்கு பலரும் விண்ணப்பித்துள்ளனர். ஆகவே பாரம்பரிய கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கும் கடலட்டைப் பண்ணையை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் கிராஞ்சிப் பகுதியில் கடலட்டைப் பண்ணை வழங்க ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களில் சிலர் தமது தவறை உணர்ந்து கடலட்டைப் பண்ணைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால் கடலட்டைப் பண்ணை போட்டவர்களுக்கு இலட்சக்கணக்கான பணம் இலாபமாக கிடைத்துள்ளது. மேலும் பலர் கடலட்டைப் பண்ணைக்கு விண்ணப்பித்துள்ளனர். பாரம்பரிய கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கும் கடலட்டைப் பண்ணையை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் வந்து தொழில் செய்வதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால் எமது வளங்கள் பாதிக்கப்படுகிறது. அத்துடன் எமது வளங்களை அள்ளிச் செல்கின்றனர்.

எமது பகுதி மீனவர்களும் இந்திய கடற்பகுதிக்குள் சென்று கடற்றொழிலில் ஈடுபடுவதை ஏற்க முடியாது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இதனையே சொல்கிறார்-என்றார். (அ)

# நாட்டு மக்களின் கருத்துகளை ஏற்று கிரிக்கெட் நிர்வாகம் விலகவேண்டும்!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கோரிக்கை

கொழும்பு, நவ. 10

இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் சரியென்றாலும் தவறாயினும் மக்களின் கருத்துப்படி அவர்கள் பதவியை விட்டு செல்லவேண்டும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கிரிக்கெட் சபை மக்களின் கருத்துக்கு செவிசாய்க்க வேண்டும் என்று கூறிய அமைச்சர், இந்த விவகாரத்தை வெகுதூரம் இழுக்காமல் உறுப்பினர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் உட்பட ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ள இலங்கை கிரிக்கெட் சபையை பதவி நீக்கம் செய்யுமாறு ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து கொண்டு வந்த தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கூறினார். (அ)

# மின்தடை முறைப்பாடு டிஜிற்றல் முறையில் அனுப்புமாறு பொதுமக்களிடம் கோரிக்கை!

கொழும்பு, நவ. 10

சீரற்ற காலநிலையில் ஏற்படும் மின் தடைகள் தொடர்பான முறைப்பாடுகளை சி.ஈ.பி கெயார் மொபைல் அப்ளிகேஷன் அல்லது 1987 அழைப்பு நிலையத்தின் சுய சேவை மற்றும் ஐ.வி.ஆர் அமைப்பு போன்ற டிஜிட்டல் வழிமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக மின் தடைகள் தொடர்பில் அழைப்பு நிலையங்களுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அதன் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.

எனவே, டிஜிற்றல் முறைகளைப் பயன்படுத்தி முறைப்பாடுகளை அனுப்புமாறு நுகர்வோரை இலங்கை மின்சார சபை கோரியுள்ளது.

இலங்கை மின்சார சபை தற்போதுள்ள நிலைமைகளை கருத்திற்கொண்டு மின்தடைகளை விரைவில் மீளமைக்க 24 மணி நேரமும் செயற்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ)

# இடைக்கால தடை உத்தரவு வழங்கிய நீதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை!

## சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை

கொழும்பு, நவ. 10

**இலங்கை கிரிக்கெட் சபையை ஊழல் மோசடியில் இருந்து பாதுகாக்க கிரிக்கெட் சடத் தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் கிரிக்கெட் இடைக்கால குழுவுக்கு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை காரணமாக கிரிக்கெட் சபையில் பாரியளவில் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. அதனால் இந்த தீப்பு வழங்கிய நீதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சு சார் விடயங்களை ஆராய இடைக்காலக் குழு அமைப்பதற்கு அமைச்சருக்கு பூரண அதிகாரம் இருக்கிறது. அதன் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க கிரிக்கெட் நிர்வாகத்தை நீக்கி, இடைக்கால குழுவொன்றை அமைத்தது சட்ட ரீதியானது. அதற்கான அதிகாரம் அவருக்கு இருக்கிறது.

அதன் பிரகாரம் பதவி நீக்கப்பட்டவரகள் நீதிமன்றம் சென்றபோது நீதிமன்றம் இது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரை அழைத்து விளக்கம் கோரி இருக்கவேண்டும். அதனை நீதிமன்றம் செய்யவில்லை.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பாகவும் அதன் ஊழல் மோசடிகள் தொடர்பாக கடந்த ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்று இடம்பெற்றது. அதில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வந்தது, கிரிக்கெட் சபையில் இருக்கும் ஊழலை இல்லாமலாக்க வேண்டும் என்பதாகும்.

அதனால் பாராளுமன்ற விவாதம் தொடர்பாக நீதிமன்றம் தெரிந்திருக்க வேண்டும். நீதிமன்றம் இது தொடர்பில் உணர்ந்திருந்தால் நீதிமன்றம் கிரிக்கெட் இடைக்கால குழுவுக்கு இடைக்கால தடை விதித்திருக்காது.

அத்துடன் நீதிமன்றம் இடைக்காலக் குழுவுக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளமையை



பயன்படுத்திக்கொண்டு கிரிக்கெட் சபையில் இருப்பவர்கள் தற்போது பாரியளவில் பொருட்களை அங்கிருந்து அகற்றி வருவதாக எமக்கு தகவல் கிடைக்கிறது. அதேபோன்று வங்கிகளில் இருந்து கோடிக்கணக்கில் பணம் மீளப்பெறுவதாக எமக்கு தகவல் கிடைக்கிறது.

இந்த நிலைக்கு யார் காரணம். கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்கறிக்கைக்கு அமையவே இடைக்கால குழுவொன்றை அமைச்சர் அமைத்தார்.

அத்துடன் நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு காரணமாகவே இன்று இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகத்தின் கோப்புகள் மற்றும் வங்கிகளில் இருக்கும் பணம் அகற்றும் நடவடிக்கை இடம்பெறுகிறது.

அதனால் மேன்முறையீட்டு நீதிபதியின் இந்த தீர்ப்பு தொடர்பாக அவருக்கு எதிராக இந்த பாராளுமன்றம் குற்றப்பிரேரணை ஒன்றை கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் இந்த நீதிபதிகளின் உறவு மற்றும் நட்பு தொடர்பான விடயங்கள் இந்த சபையில் வெளிப்படுத்தப்பட்டன.

அத்துடன் இலங்கையில் 12 கிரிக்கெட் சங்கங்களே கிரிக்கெட் விளையாடுகின்றன. ஆனால் கிரிக்கெட் சபைக்கு நிர்வாகிகளை தெரிவுசெய்ய 142 சங்கங்கள் வாக்களிக்கின்றன. இதில் அதிகமான சங்கங்கள் நிர்வாக தெரிவுக்கு வாக்களிப்புக்காக மாத்திரம் பதிவு செய்துகொண்டிருக்கின்றன.

அதனால் இந்த சங்கங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவை அனைத்துக்கும் அப்பால் கிரிக்கெட் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் அத்துடன் இலங்கை கிரிக்கெட் சபை ஊழல் மோசடிமிக்கது என முழு இலங்கைக்கும் தெரியும். அதனால் நீதிமன்றத்துக்கு இது தெரியாது என தெரிவிக்க முடியாது.

மோசடி அதிகாரிகளை பதவி நீக்கியதால் அந்த அதிகாரிகளே நீதிமன்றம் சென்றுள்ளனர். அப்படி இருக்கும்போது நீதிமன்றம் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் இது தொடர்பாக விளக்கம் கோராமல் இடைக்கால தடை போடடுவதற்கு நீதிமன்றுக்கு இருக்கும் அவசரம் என்ன என கேட்கிறோம்-என்றார்.(அ)



# மன்னாரில் காணிகளை விற்பனை செய்யாதோருக்கு கொலை மிரட்டல்!

மன்னார், நவ. 10

மன்னாரில் காணிகளை விற்பனை செய்ய மறுப்பவர்கள் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த 'டைட்டானியம் சாண்ட்' நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 4000 துளைகளுக்கு மேல் இட்டு கனிய மணல் ஆய்வுகளை மேற்கொண்டு தற்போது மணல் அகழ்வுக்கான அனுமதியை கோரியுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் சுமார் 18 திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்ணையன் குடியிருப்பு பகுதிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த விடயத்தை அறிந்த அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு ஆய்வுகளுக்கு அனுமதி வழங்க மறுத்ததுடன் வீதித் தடைகளையும் ஏற்படுத்தி மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க முடியாது என்று கோஷம் எழுப்பியிருந்தனர்.

இதனையடுத்து மக்களின் தொடர் எதிர்ப்பின் காரணமாக வருகை தந்த குழுவினர் சம்பவ இடத்தை விட்டு வெளியேறியதுடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டனர்.

இதேவேளை, வன்னியை சேர்ந்த முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ஒருவர் குறித்த மணல் அகழ்வு மேற்கொள்ள உள்ள இலங்கைக்கான பிரதிநிதியிடம் பாரிய அளவு இலஞ்சம் கோரியதாகவும், அதேநேரம் குறித்த அமைச்சரின் உறவினரான முஹமட் அம்மானி எனப்படும் நபர் ஒருவர் மக்களின் காணிகளை அடாத்தாக பிடித்து குறித்த நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளதாகவும் மக்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தனர்.

அத்துடன் காணி விற்பனை செய்ய மறுப்பவர்களை "வெள்ளை வானில் கடத்துவோம், கொலை செய்வோம்" என அச்சுறுத்தி காணி கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகவும் இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் மௌனம் காத்து வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதனையடுத்து அகழ்வுக்கான அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதோடு, முன்னாள் அமைச்சரின் பின் புலத்தில் தற்போது மணல் அகழ்வுக்கான உயர்மட்ட அனுமதிகளை பெறுவதற்கான செயல்பாடுகள் இடம் பெறுவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ)

# வெளிநாடுகளுக்கான புதிய தூதர்கள் வடக்கு ஆளுநருடன் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், நவ. 10

வெளிவிவகார அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்ட பல வெளிநாடுகளுக்கான தூதுவர்கள் வடக்கு மாகாணத்துக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தபோது வட மாகாண ஆளுநர் செயலகத்தில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினர்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் வட மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மாகாணத்தை அபிவிருத்தி செய்யவும் நீண்ட மற்றும் குறுகிய கால வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த ஆளுநர், அந்த வேலைத்திட்டங்களுள் வட மாகாணத்தில் 25,000 நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பது, சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பது தொடர்பான திட்டங்களின் முன்னாயத்த வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதன்போது, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு வட மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், மக்களின் அன்றாட நடவடிக்கைகள், அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆளுநர் விளக்கமளித்தார்.

இந்த கலந்துரையாடலானது வட மாகாண மக்களின் வாழ்வை கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களின் ஆதரவை பெறும் நோக்கிலேயே இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது, ஆளுநரின் தலைமையில் மாகாண மக்களுக்கு ஆற்றிவரும் சேவையை பாராட்டிய புதிய தூதுவர்கள், எதிர்காலத்தில் வடக்கின் அபிவிருத்திக்காக தாம் கடமை புரியும் நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி பயணிகள் படகு சேவைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டமை, எதிர்காலத்தில் மன்னாருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான படகு சேவைத்திட்டங்கள், மீன்பிடி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் போன்றவை பற்றியும் வட மாகாணத்தின் வளங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் செய்யக்கூடிய சாதகமான, ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்தும் பேசப்பட்டது.

(அ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு ரொஷான் ரணசிங்கவுக்கு சஜித் அழைப்பு

கொழும்பு, நவ. 10

அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் வந்தால் அவரை வரவேற்பதற்கு தயார். அவர் எமது பக்கம் வருவதை நானும் விரும்புகின்றேன் - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற "ஊழல் மிக்க கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்" எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகியன ஒன்றிணைந்து கொண்டுவரும் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

"ரொஷான் ரணசிங்க பணத்துக்கு அடிபணியும் நபர் கிடையாது. அவர் கள்ளன் அல்ல என்பது எனக்கு தெரியும். அவர் போன்றவர்கள்தான் எமக்கு தேவை." - எனவும் சஜித் குறிப்பிட்டார். (அ)

# பெண்ணை வெட்டிக் கொன்றவருக்கு 9 வருடங்களின் பின் மரண தண்டனை

## கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கிளிநொச்சி, நவ. 10

**பெண் ஒருவரை கொலை செய்த குற்றவாளிக்கு ஒன்பது வருடங்களின் பின்னர் நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.**

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி மாத்தறை பகுதியைச் சேர்ந்த இராஜசுலோஜனா என்ற பெண் வெட்டிப் படுகொலை செய்து கிணற்றுக்குள் வீசி இருந்து நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கிளிநொச்சி பொலிஸார் சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு அண்மையிலுள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்கள அலுவலகத்தின் விடுதியில் இருந்து மோப்ப நாயின் உதவியுடன் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு இருந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு நேற்று குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. எம் .ஏ சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

குறித்த தீர்ப்பு வழங்கும் போது அனைவரும் எழுந்து நின்றதுடன் நீதிமன்றத்தின் அனைத்து மின்விளக்குகளும் அணைக்கப்பட்டு நீதிமன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட முதலாவது மரண தண்டனை தீர்ப்பு இதுவாகும். (அ)

# அநுராதபுரம் வைத்தியசாலையின் இரு மருத்துவர்கள் மீது தாக்குதல்!

கொழும்பு, நவ. 10

வாரியப்பொல நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் அநுராதபுரம் வைத்தியசாலையின் வைத்தியர்கள் இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த வைத்தியர் ஒருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வாரியபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் விசேட பொலிஸ் அறிக்கை ஒன்றின் ஊடாக அறிவித்துள்ளதையடுத்து, வாரியபொல பொலிஸார் சந்தேக நபர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் குழுவொன்று பணி அமர்வில் பங்குபற்றுவதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்று பஸ்ஸில் அநுராதபுரம் நோக்கி திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை கிரிக்கெட்டின் நிலை நாட்டின் நிலை இரண்டும் ஒன்றே

## சபையில் கூறினார் சாணக்கியன் எம்.பி

கொழும்பு, நவ. 10

இலங்கை கிரிக்கெட்டின் நிலை, நாட்டின் நிலை இரண்டும் ஒன்றே என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் இரா. சாணக்கியன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு அழிந்த பின்னர், கிரிக்கெட் அழிந்த பின்னர், அழிலுக்குக் காரணமானவர்கள் இவ்வாறு பேசுவது கேலிக்கூத்தானது என அவர் தெரிவித்தார்.

கிரிக்கெட் நிறுவனம் தொடர்பான விவாதத்தில் மேலும் கருத்து தெரிவித்த அவர்-

நீண்ட காலத்திற்கு முன்பே அமைச்சர் இந்த முடிவை எடுத்திருக்கவேண்டும். கிரிக்கெட் மீதான மரியாதையை இலங்கை இழந்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவராக ஷம்மி டி சில்வா இருந்தபோது நாமல் ராஜபக்ஷ விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தார். கிரிக்கெட் நிறுவனங்களில் அதே பெயர்கள் எப்படி மாறி வருகின்றன என்பதைப் பார்க்கிறோம்.

இந்த தோல்விகளுக்கு தற்போது ஓய்வு பெற்ற மூத்த வீரர்களும் பொறுப்பேற்கவேண்டும். இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்காமல் தங்கள் சாதனைகளுக்காக விளையாடினர். மூத்த வீரர்கள் ஒரேயடியாக வெளியேறும்போது இளம் வீரர்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. எனவே இதற்கான பொறுப்பை நாம் கூட்டாக ஏற்க வேண்டும்.

மாவட்ட அளவில் கூட கிரிக்கெட் தொடர்பான அதிகாரிகள் தான் உள்ளனர்.எல்லாவற்றையும் இழந்த பின், இந்த மாற்றங்களை செய்ய முயற்சிக்கின்றனர்.

தொலைதூர மாவட்டங்களில் லெதர் பந்தைத் தொடாத திறமையான பிள்ளைகள் உள்ளனர்-என்றார். (அ)



# யாழ்ப்பாணத்தில் தீபாவளி வியாபாரம்

யாழ்ப்பாணம், நவ. 10

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் புத்தாடை கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, யாழ். மாநகர சபைக்குட்பட்ட நகர பகுதி, முனிஸ்வரா வீதியில் உள்ள அங்காடி கடைத் தொகுதிகளில் புத்தாடை கொள்வனவுக்காக வருகை தரும் பொது மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (அ)

# தலைமன்னாரில் கைதாகிய 38 இந்திய மீனவர் விடுதலை

மன்னார், நவ. 10

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து இரு வேறு சம்பவங்களின்போது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 38 இந்திய மீனவர்களும் நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி 2 படகுடன் 15 இந்திய மீனவர்களும்,கடந்த 29 ஆம் திகதி 3 படகுகளுடன் 23 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த மீனவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் மன்றில் முன்வைக்கப்பட்டன.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த மீனவர்கள் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

மேலும், குறித்த 5 படகுகளின் உரிமையாளர்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதவான் இந்திய துணைத் தூதரகம் ஊடாக படகு உரிமையாளர்களுக்கு அறிவிக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கு தொடுநரினால் முதலாவது குற்றவாளியாக படகுகளின் உரிமையாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 38 மீனவர்களும் மிகிரியாகம தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டு இந்திய தூதரக அதிகாரிகள் ஊடாக நாட்டுக்கு அனுப்பி வைக்க நீதிமன்றம் உத்தரவிடடுள்ளது.

மேலும், இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும்போது அவர்களின் உடைமையில் இருந்த சில சான்றுப் பொருட்களை உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்குமாறு மன்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

நேற்று வழக்கு தொடுநர் சார்பாக அரச சட்டத்தரணி மன்றில் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தகவல் அறியும் சட்டத்தை மீறிய வழக்கில் களனி பல்கலை துணைவேந்தர் விடுதலை!

கொழும்பு, நவ. 10

இலங்கை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உத்தரவை மீறியதாக குற்றம் சுமத்தப்பட்ட களனிப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் நிலாந்தி டி சில்வா, பல்கலைக்கழகப் பதிவாளர் கே.கே.தர்மதிலக ஆகியோரை வழக்கிலிருந்து விடுவித்து கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டுள்ளார்.

பிரதிவாதி சார்பில் ஆஜரான சரத் ஜயமான்ன முன்வைத்த உண்மைகளை பரிசீலித்த நீதவான் இந்த தீர்மானத்தை வழங்கினார்.

பேராசிரியர் பிரசாந்தி நாரங்கொட சமர்ப்பித்த முறைப்பாட்டின் பிரகாரம், தகவல் ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது.

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டாளர் தொடர்பான ஆரம்ப விசாரணை அறிக்கையை வழங்காமல் ஆணைக்குழுவின் உத்தரவை மீறியதாக குற்றம் சுமத்தி பிரதிவாதிகளுக்கு எதிராக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் முதற்கட்ட ஆட்சேபனைகளை முன்வைத்த பிரதிவாதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகளின் பிரகாரம் வழக்குத் தொடர ஆணைக்குழுவுக்கு மாத்திரமே உரிமை உண்டு எனத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், குறித்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வாறான வழக்கை தாக்கல் செய்வதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் இல்லை எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயமான்ன தனது ஆரம்ப ஆட்சேபனைகளில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இந்த வழக்கை தொடர முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இந்தச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம் நிறுவனங்களுக்கே தவிர தனிநபர்களுக்கு அல்ல எனவும், இந்த இரண்டு பிரதிவாதிகளும் சட்டவிரோதமான முறையில் இந்த வழக்கில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார்.

அடிப்படை ஆட்சேபனைகளை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இவ்வாறான வழக்கை உரிய ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பெயர் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையின் கீழ் மட்டுமே தாக்கல் செய்ய முடியும் என தெரிவித்தார்.

குறித்த சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் இல்லை எனவும் எனவே இந்த வழக்கை தொடர முடியாது என்பதால் பிரதிவாதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் நீதவான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பெயர் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையின் கீழ் மீண்டும் வழக்குத் தொடரப்படுவதை இந்தத் தீர்ப்பு தடுக்காது என்று நீதவான் மேலும் கூறினார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்டு நிராகரிக்கப்பட்ட முதல் வழக்கு இது என்று சட்டத்தரணிகள் கூறுகின்றனர். (அ)

ஈழநாடு



# ஆரம்பக் கல்வியில் 9ஆம் இடத்தில் இருக்கும் கிழக்கு மாகாணத்தை முன்னேற்றவேண்டும்!

## கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் வேண்டுகோள்

அம்பாறை, நவ. 10

"கிழக்கு மாகாணம் ஆரம்பக்கல்வியை பொறுத்தவரை ஒன்பதாவது நிலையில் இருக்கின்றது. அந்த நிலையிலிருந்து மேலே கொண்டு வர நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்."

-இவ்வாறு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் கல்முனை மற்றும் சம்மாந்துறை வலய ஆரம்பக் கல்வி தரம் நான்கில் கற்பிக்கும் ஆசிரியர்கள் முன்னிலையில் பேசும்போது குறிப்பிட்டார்.

இந்த அமர்வு கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம் எஸ் சஹுதுல் நஜீம் தலைமையில் நேற்று முன் தினம் புதன்கிழமை பிற்பகல் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் நடைபெற்றது .

அங்கு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா சிறப்பதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கல்முனை கல்வி மாவட்டத்திற்கான ஆரம்பக்கல்வி இணைப்பாளரும் நாவிதன்வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான பி.பரமதயாளன் காணொளி மூலம் சம்மாந்துறை கல்முனை வலயங்களின் ஆரம்ப கல்வி நிலைமைகள் தொடர்பான சமர்ப்பணத்தை சிறப்பாக செய்தார்.

அதனை தொடர்ந்து மாகாண கல்வி பணிப்பாளர் மேலும் பேசுகையில்.

கிழக்கு மாகாணம் கல்வியின் ஏனைய துறைகளில் முன்னணியில் இருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.ஆனால் ஆரம்பக்கல்வி ஒன்பதாவது நிலையில் இருப்பது கவலைக்குரியது.

மிகவும் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் அதிகாரிகள் இருக்கும் பொழுது இந்த நிலைமை தொடர அனுமதிக்க முடியாது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டு புள்ளிக்கு மேல் பெறுவதற்கு நாம் அனைவரும் படாதபாடுபடுகின்றோம். ஆனால் 70 என்ற சித்தி புள்ளிக்கு மேல் அனைவரையும் பெற வைக்க வேண்டும் என்ற நோக்கத்திலிருந்து தவறிவிடுகின்றோம்.



இதுவே நாம் பின்னடைவதற்கு பிரதான காரணம்.

எனவே நாம் அனைவரும் ஒத்துழைத்து இந்த நிலைமையிலிருந்து மேலும் முன்னேற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம் எஸ் சஹுதுல் நஜீம் பேசுகையில்..

ஒன்பதாம் நிலையில் இருந்து எடுத்த எடுப்பிலேயே முதல் நிலைக்கு வர முடியாது. இருந்தாலும் ஐந்தாவது நிலையாவது வர அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பேசுகையில்-

புதிய மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் வந்ததும் எடுத்த பெரு முயற்சி இன்று செயல் உருவாக பரிணமிக்கிறது. ஆரம்பக் கல்வியை முன்னேற்ற வேண்டும் என்று கூறியதோடு மாத்திரம் இல்லாமல் மாவட்டம் தோறும் வருகை தந்து விழிப்புணர்வு கலந்துரையாடலை நடாத்தி வருவது பாராட்டுக்குரியது. வாழ்த்துக்கள்-என்றார்.

இந்த நிகழ்வில் கல்முனை மற்றும் சம்மாந்துறை வலய பிரதி கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி பணிப்பாளர்கள், ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் 250 தரம் நான்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள்.

(அ)

# தையல் இயந்திரங்களை வழங்கினார் பாகிஸ்தான் தூதுவர் உமர் பாறூக் புர்கி

அம்பாறை, நவ. 10



பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறூக் புர்கி மற்றும் அவரது ஆலோசகரான பைசல் அலி கான் ஆகியோர் கல்முனை மாநகர முன்னாள் பிரதிமுதல்வரும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும்,கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரின் அழைப்பின் பேரில் இரண்டாவது தடவையாக கல்முனைக்கு விஜயம் மேற்கொண்டு பொது மக்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் முகமாக தேவையுடைய தெரிவு செய்யப் பட்ட பயனாளர்களுக்கு ஒரு தொகுதி தையல் இயந்திரங்களை வழங்கினார்.

குறித்த இந்நிகழ்வானது கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஒருங்கிணைப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தேவையுடைய பொதுமக்களின் வாழ்வாதார உதவியின் அங்கமாக குறித்த தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களை சந்தித்து அவர்களின் தேவைப்பாடுகளையும் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

(அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு!

## பொது மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

மட்டக்களப்பு, நவ. 10

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகம் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்து துண்டுபிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில்-

அண்மைக்காலமாக பகலிலும் இரவிலும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே பொதுமக்கள் உடைமைகளை கவனமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பது உங்கள் பொறுப்பாகும்.

எனவே பொதுமக்கள் துவிச்சக்கரவண்டி, மோட்டர்சைக்கிள், முச்சக்கரவண்டி, கார், வான்களை பூட்டி திறப்புக்களை பாதுகாப்பாக வைத்து கொள்வதுடன், தங்க ஆபரணங்கள், பணம், ஆவணங்கள் போன்றவற்றையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும்.

அதேவேளை தாங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது வீட்டைநன்றாக பூட்டி திறப்பைக் கொண்டு செல்லவும். அதைவிடுத்து திறப்பை பூச்சாடியின் கீழே, கால்துடைப்பான் கீழே வைப்பதை தவிர்ப்பதுடன் சிறுபிள்ளைகளை தனிமைப்படுத்தி வீட்டில் விட்டு வெளியே செல்வதை தவிர்க்கவும்.

அதேவேளை யாசகம் பெறும் மற்றும் பொருட்களை விற்பனை செய்வதாக கூறிவரும் நபர்கள் மீது கவனமாக இருக்கவும். வெளியில் வாகனம் நிறுத்த தேவை ஏற்பட்டால் சிசிரிவி கமெரா பொருத்தப்பட்ட இடத்தில் நிறுத்தவும்.

சந்தேகத்துக்கு இடமாக நபர்கள் நடமாடினால் உடன் 119 அவசரசேவை அல்லது 0718591130 பொலிஸ் பொறுப்பதிகாரி அல்லது 065 2224422 பொலிஸ் நிலைய இலக்கத்துக்கு அழைத்து பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்-என்றுள்ளது.

(அ)

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கல்முனைக் கிளையினர் ஆர்ப்பாட்டம்!



அம்பாறை, நவ. 10

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த ஐந்து நாட்களாக நாடளாவிய ரீதியில், மாகாண மட்டத்தில் நடத்தி வரும் அமைதி ஆர்ப்பாட்டங்களின் ஐந்தாம் நாள் நிகழ்வாக நேற்று முன்தினம் மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில், மருத்துவர்களுக்கான பொருளாதார நீதியை வழங்குவதற்கான திட்டவட்டமான செயல்திட்டத்தை அறிவிக்க இயலாமைக்கு எதிராக அமைதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கையின் சுகாதாரத்துறையில் தற்போது நிலவி வரும் பாரிய பல பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்குமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இதன் ஒரு அங்கமாக கல்முனை பிராந்தியத்தின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கிளைகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிராந்திய ரீதியான ஆர்ப்பாட்டம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நடைபெற்றது.

இதில் கல்முனை பிராந்தியத்தின் வைத்தியர்கள் பலர் பங்கு பற்றினார்கள்.

(அ)

# நிந்தவூர் வைத்தியசாலையில் கிளினிக் பார்மசி திறந்துவைப்பு

அம்பாறை, நவ. 10

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் கடந்த 07ஆம் திகதி கிளினிக் பார்மசி திறந்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.பீ.அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.ஆர்.இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த அலகினை திறந்து வைத்தார்.



இந்த நிகழ்வில் தலைமை உரையாற்றிய வைத்திய அத்தியட்சகர் எம்.பீ.அப்துல் வாஜித், அவசியம் தேவையான இம் மருந்தகம் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் திருமதி எஸ்.ஆர். இஸ்ஸதீனால் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டதாகவும் இதன் மூலம் மருந்தகத்தில் நோயாளர்கள் காத்திருப்பதை குறைக்கவும் மருந்துகளை இலகுவாக களஞ்சியப்படுத்தவும் முடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், உட்பட கல்முனை ஆயுர்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.நபீல், பிராந்திய மேற்பார்வை மருந்தாளர் திருமதி இந்திரகுமார் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் ஹமாஸ் இராணுவ மையம்!

**10 ஹமாஸ் பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தை இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டுவீசி அழித்தன.**

டெல் அவிவ், நவ. 10

**காஸா முனைப்பகுதியில் உள்ள ஹமாஸ் இராணுவ மையத்தை இஸ்ரேலிய தரைப் படைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன.**

**இதுகுறித்து இஸ்ரேலிய பாதுகாப்பு படை அதிகாரிகள் கூறியிருப்பதாவது:**

**காஸா நகரில் உள்ள ஹமாஸ் இராணுவ மையம் இஸ்ரேலிய படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.**



அங்கிருந்து டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், ஆயுதங்கள், புலனாய்வுக்கான உபகரணங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

நஹல் படைப்பிரிவினர் அளித்த ஒத்துழைப்பையடுத்து 10 ஹமாஸ் பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தை இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டுவீசி அழித்தன.

காஸா நகரின் ஷெஜாயா பகுதியில் உள்ள அல்-குத்தூஸ் மருத்துவமனைக்கு அருகில் உள்ள கட்டிடத்தில் ஹமாஸ் பயங்கரவாதிகள் சிலர் பதுங்கியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

அவர்கள் இஸ்ரேலிய தரைப் படையைத் தாக்கலாம் என்பதால் வீரர்கள் மிக கவனமாக முன்னேறி வருகின்றனர்.

இந்நிலையில், ஹமாஸின் டெய்ர் அல்-பலாஹ் பட்டாலியன் கமாண்டர் அசெபா இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். போரை ஹமாஸ் தீவிரவாதிகள் தொடங்கி வைத்தனர்.அதில் வெல்ல வேண்டும் என்பதே எங்களின் தற்போதையஇலக்கு. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

(அ)

# உக்ரைனுக்கான உதவிகளை நிறுத்தியது ஸ்லோவாக்கியா

கீவ், நவ. 10

ஸ்லோவாக்கியாவின் புதிய அரசாங்கம் உக்ரைனுக்கு ரொக்கெட்டுகள் மற்றும் வெடிமருந்துகளை நன்கொடையாக வழங்கும் திட்டத்தை புதனன்று நிராகரித்தது.

பிரதம மந்திரி ராபர்ட் பிகோ தேர்தல் பிரசாரத்தின்போதே, ரஷ்யப் படையெடுப்பை எதிர்த்துப் போராடும் உக்ரைனுக்கான இராணுவ உதவியை நிறுத்துவதாக உறுதிமொழி அளித்திருந்தார். அவர் ரஷ்ய ஆதரவாளர்.

இந்த உதவிப் பொதியில் 140 கே.யு.பி. வான் பாதுகாப்பு அமைப்பு ரொக்கெட்டுகள், 5,000 க்கும் மேற்பட்ட 125 மிமீ பீரங்கி வெடிமருந்துகள் மற்றும் 4 மில்லியன் சிறிய ஆயுத வெடிமருந்துகள் ஆகியவை அடங்கும்.

நேட்டோ அங்கத்துவ நாடான ஸ்லோவாக்கியாவில் பதவியிலிருந்த காபந்து அரசாங்கம் கடந்த அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு முன்னர், மேற்படி உதவித் திட்டத்தை அறிவித்திருந்தது.

புதன்கிழமையன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிகோவின் அரசாங்கம் இந்த தொகுப்பை நிராகரித்ததாக அரசாங்கத்தின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கான மேற்கத்திய இராணுவ ஆதரவையும் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளையும் விமர்சிக்கும் பிரசாரத்தை பிகோ மேற்கொண்டார்.



ஹங்கேரியின் தலைவர் விக்டர் ஆர்பனைப் போல, உக்ரைன் விவகாரத்தில் அமைதிப் பேச்சுக்களையே ஸ்லோவாக்கியாவின் புதிய பிரதமர் ஆதரிக்கிறார்.

இராணுவக் கடைகளில் இருந்து உக்ரைனுக்கு ஏற்றுமதி செய்வதை நாடு நிறுத்தும் என்று பிகோ பலமுறை கூறியிருக்கிறார். ஆனால் தனியார் வணிக ஒப்பந்தங்கள் பாதிக்கப்படாது என்று அவர் சமீபத்தில் தெளிவாகக் கூறினார்.

அண்மைக் காலமாக ஸ்லோவாக்கியா, உக்ரைனின் உறுதியான ஆதரவாளராக இருந்தது. மற்றும் முந்தைய மைய-வலது அரசாங்கம் சண்டை வாகனங்கள் மற்றும் எஸ்-300 வான் பாதுகாப்பு அமைப்பு மற்றும் மிக்-29 ஜெட் உள்ளிட்ட இராணுவ உபகரணங்களை வழங்கியது.

அதன் கிழக்கில் உக்ரைனுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் ஸ்லோவாக்கியா, பெப்ரவரி 2022 இல் ரஷ்யாவின் தாக்குதலுக்குப் பிறகு, பிகோவின் நியமனத்திற்கு முன்னர், 13 தொகுப்புகளில் 671 மில்லியன் யூரோக்கள் மதிப்புள்ள இராணுவ உதவிகளை அனுப்பியது.

(அ)

# குடியேறிகளுக்கு அரச மருத்துவ உதவி இனிமேலும் கிடைக்காது!

**பிரான்ஸில் செனட் அனுமதி**



பாரிஸ், நவ. 10

வீஸா மற்றும் வதிவிட ஆவணங்கள் ஏதுமற்ற வெளிநாட்டுக் குடியேறிகளுக்கு இதுவரை காலமும் கிடைத்துவந்த முழு இலவச அரச மருத்துவ உதவியை ரத்துச் செய்கின்ற சட்ட விதிக்கு ஆதரவாக பிரான்ஸ் செனட் சபை வாக்களித்திருக்கிறது.

அரச மருத்துவ உதவிக்கு மாற்றாக ஏ.எம்.யு எனப்படுகின்ற அவசர மருத்துவ உதவி அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன்படி குடியேறிகள் மிக அவசரமான - ஆபத்தான- நோய்களுக்கு மாத்திரமே அரச மருத்துவ உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

செனட் சபையில் இந்தச் சட்ட விதி மீது கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் அதற்கு ஆதரவாக 200 வாக்குகளும் எதிராக 136 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. இச் சட்டமூலம் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையிலும் நிறைவேற்றப்பட வேண்டும்.

இதுவரை காலமும் வதிவிட அனுமதி கிடைக்காத வெளிநாட்டவர்களுக்கு அவர்கள் நாட்டுக்குள் வந்து தங்களைப் பதிவு செய்த பின்னர் வதிவிட அனுமதி பெற்றுக் கொள்வதற்கு முன்னரான காலப் பகுதியில் வழங்கப்பட்டுவந்த இலவச அரச மருத்துவ உதவியை இல்லாதொழிக்கின்ற இந்தச் சட்ட விதி புதிய குடியேற்றச் சட்டப் பிரேரணையில் இடம்பெறுகின்ற மிக முக்கியமானதும் - கடுமையானதுமான - ஒரு சரத்தாக இருக்கிறது. இதன் மீதான விவாதங்கள் கடந்த பல மாதங்களாக அரசியல் மட்டங்களில் நீடித்து வந்தன.

வலதுசாரிகளால் புகுத்தப்பட்ட இந்தச் சரத்தை இடதுசாரிக் கட்சிகள் எதிர்த்து வந்தன.

(அ)

# இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல்களில் தினமும் 180 பலஸ்தீன சிறுவர் கொலை!

ஜெருசலேம், நவ. 10

ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் மீது நடத்திவரும் தாக்குதலுடன் தொடங்கிய இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல்களில் தினமும் 180 பலஸ்தீன சிறுவர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியப் படைகளின் மனிதாபிமானமற்ற வான்வழித் தாக்குதல்களால் நேற்று முன்தினம் முடிவடைந்த மாதத்தில் 4237 பலஸ்தீனச் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 1350 சிறுவர்கள் காணாமல் போயுள்ளதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இடிந்த கட்டிடங்களின் இடிபாடுகளில் சிக்கி, தற்போது இறந்துவிட்டதாகக் கருதப்படுகிறது.

இதுவரையில், இஸ்ரேல் இராணுவத்தின் கொடூரத் தாக்குதல்களில் 5,500 பலஸ்தீனச் சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதை விட இரண்டு மடங்கு சிறுவர்களின் எண்ணிக்கை அதிகம் என பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தில் உள்ள குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அமைப்பின் பொறுப்புக்கூறல் திட்டத்தின் இயக்குநர் அய்ட் அபு கூறுகையில், பலஸ்தீன குழந்தைகளை இஸ்ரேலியப் படைகள் கொல்லும் அதே வேளையில் குண்டுவெடிப்புகளை நிறுத்துமாறு இஸ்ரேலை வற்புறுத்தும் பலம் தங்களுக்கு இல்லை என்பதை உலகத் தலைவர்கள் நாளுக்கு நாள் நிரூபித்து வருகின்றனர்.



ஆபத்தான விகிதத்தில் குண்டுவெடிப்புகளை முடிவுக்கு கொண்டுவர இஸ்ரேலை கட்டாயப்படுத்துவது உலகத் தலைவர்கள் கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த மனிதாபிமான பதில் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இஸ்ரேலியப் படைகள் காஸா பகுதியில் உள்ள மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் பேக்கரிகள் போன்ற குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் சிவிலியன் உள்கட்டமைப்புகளை நேரடியாகத் தாக்குவதால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அய்ட் அபு கூறியுள்ளார்.

காஸா குழந்தைகளின் புதைகுழியாக மாறிவிட்டதாகவும், தினமும் ஏராளமான குழந்தைகள் காயமடைவதாகவும், உயிரிழப்பதாகவும் ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் சமீபத்தில் கூறியிருந்தார்.

எரிபொருள் இல்லாவிட்டால் பிறந்த குழந்தைகளும், இயந்திரங்களை நம்பியிருக்கும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளும் இறக்க நேரிடும்.

தாக்குதலுக்கு உள்ளாகும் வாய்ப்புள்ளதால் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளை வெளியேற்றுமாறு அல்-ரான்டிசி சிறுவர் மருத்துவமனைக்கு இஸ்ரேல் அதிகாரிகள் அறிவித்திருந்த போதிலும், தற்போது கூட வைத்தியசாலை அமைந்துள்ள பகுதி இரண்டு முறை இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# வங்கியிலிருந்து 2 மில்லியன் டொலர்களை எடுப்பதற்கு கிரிக்கெட் சபையினர் முயற்சி

## சபையில் தகவல் வெளியிட்டார் ரொஷான் ரணசிங்க

கொழும்பு, நவ. 10

**கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் உள்ள இலங்கை வங்கிக் கணக்கில் இருந்து 2 மில்லியன் டொலர்களை பெறுவதற்கு கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் முயற்சிப்பதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தகவல் வெளியிட்டார்.**



இதன்போது, கட்சி வேறுபாடுகள் இன்றி முடிந்தால், ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இந்த அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

சட்டங்கள் குறித்து சிந்திக்க இது நேரமல்ல என்றும், இது இலங்கையின் கிரிக்கெட் நிதி போலவே நாட்டின் நிதி என்பதனால், ஜனாதிபதியுடன் பேசி செயற்பாடுகளை இடைநிறுத்துமாறும்,இது பாரதூரமான சம்பவம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கிரிக்கெட் சபை யாருடைய அதிகாரத்தின் பேரில் இது போன்ற செயல்களைச் செய்கிறது என்பதைக் கண்டறியுமாறும்,இது ஒரு பாரிய பிரச்சினை எனவும்,இவ்வாறான கேவலமான செயற்பாடுகளை அனுமதிக்கக் கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியில், அமைச்சர் ரொஷான் ரணசிங்க நீடிக்க வேண்டும் என்றும், இதை பிரேரணையாக சமர்ப்பித்து தானே நிறைவேற்றுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

(அ)

# பாடசாலைக்கு சென்ற மாணவன் பாதையில் தவறி வீழ்ந்ததில் பலி!

கொழும்பு, நவ. 10

கொபாவ, கோவின்ன பிரதேசத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது தனது வீட்டுக்கு அருகில் உள்ள வீதியில் விழுந்து ஹொரணை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

புளத்சிங்கள பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சனபட வீதி, கொபாவ, பகுதியில் வசிக்கும் 12 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் பயணித்து பாடசாலைக்கு செல்ல பஸ்ஸில் செல்ல வேண்டியுள்ளது.

நேற்றுக் காலை மாணவனின் தந்தை வீட்டில் இல்லாத காரணத்தினால் வீட்டிலிருந்து நடந்து பாடசாலைக்கு தனியாகச் சென்றுள்ளார்.

சாலையில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் விழுந்து காயமடைந்த நிலையில் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சிகிச்சை பெற்று வந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக ஹொரண வைத்தியசாலை பொலிஸார் புலத்சிங்கல பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

புலத்சிங்கல பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சந்தன விதானகேவின் பணிப்புரையின் பேரில் பொலிஸ் பரிசோதகர் குணசேகர உள்ளிட்ட பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# நாட்டில் அதிகரிக்கும் டெங்கு நோய் தாக்கம்

கொழும்பு, நவ. 10

கடந்த ஒரு வாரத்தில் டெங்கு நோயினால் 4 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

டெங்கு நோயினால் இந்த வருடத்தில் மாத்திரம் 43 மரணங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்தமாதத்தின் முதலாம் திகதி முதல் நேற்று முன் தினம் வரையான காலப் பகுதியில் 1,685 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (அ)

# நுவரெலியா நகரில் பெரும் போராட்டம்!

## தபாலகத்தை விற்கும் முடிவுக்கு எதிராக



கொழும்பு, நவ. 10

நுவரெலியா தபால் நிலையத்தை சுற்றுலா நோக்கங்களுக்காக பயன்படுத்தும் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நுவரெலியா தபால் நிலையத்துக்கு முன்பாக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியாவில் பிரதான நகரின் அடையாளமாக அமைந்துள்ள நுவரெலியா தபால் நிலையத்தை தாஜ் சமுத்ரா ஹோட்டல் நிறுவனத்துக்கு ஒப்படைக்க யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள் என பலரும் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நுவரெலியா நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, வர்த்தகர்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். ஆட்டோ சாரதிகளும் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

நுவரெலியா நகரில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்துடன் நுவரெலியா பிரதான நகரில் உள்ள வீதிகளில் பேரணியாக சென்று பெருந்திரளானவர்கள் திரண்டு அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

குறித்த போராட்டம் காரணமாக நுவரெலியா பிரதான நகருக்கான வீதியில் போக்குவரத்து சுமார் ஒரு மணித்தியாலயம் தடைப்பட்டு இருந்தது.

போராட்டம் முன்னெடுக்கப்படும் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கிரிக்கெட் நிறுவனம் தனி இராச்சியமல்ல!

## சபையில் சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 10

"அமைச்சருக்கும், பாராளுமன்றத்துக்கும் மேலாக இலங்கை கிரிக்கெட் சபை தனி இராச்சியம் போல செயற்பட முடியாது." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் உள்ள பாராளுமன்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

விளையாட்டு சங்கங்கள் என்று அழைக்கப்படும் சில சங்கங்கள் பல்வேறு நோக்கங்களை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டாலும், அவை நடைமுறையில் சங்கங்களாக இல்லை என்றும், இந்த சங்கங்கள் பல்வேறு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை அல்லது குழு நிகழ்ச்சி நிரல்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதால், இவை தவறாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சஜித் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களில் ஒன்றாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இருந்தாலும், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு உட்பட்ட பாராளுமன்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழுவிற்கு,



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் பிரசன்னமாகாதது பிரச்சினைக்குரிய விடயம் என்றும், பாராளுமன்றத்துக்கும் அமைச்சருக்கும் மேலாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் செயற்பட முடியாது என்றும் அது தனி இராச்சியம் அல்ல என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள் பெயரளவிலான சங்கங்கள் உருவாவதை தடுக்க முடியாது என்பதால், புதிய விளையாட்டுச் சட்டம் அல்லது பல சட்டங்களை கொண்டுவருவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும்,இவ்வாறான பெயரளவிலான சங்கங்களுக்கு தண்டனை வழங்கும் முறையொன்றை உருவாக்கினால் இவ்வாறான போலி சங்கங்கள் உருவாக்கப்படுவது நின்றுவிடும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட விவாத வாரத்தின் விசேட தினமொன்றில் இலங்கை கிரிக்கெட் சபையினரை அழைத்து வந்து கேள்வி கேட்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (அ)

ஈழநாடு



## 13ஆவது....

ஜே.ஆர் ஜயவர்தனவை அடிபணிய வைத்தே இச்சட்டம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.

அவ்வாறு நிறைவேற்றிய சட்டத்தை ஜே.ஆர். ஜயவர்தன முழுமையாக அமுல் படுத்தப்படவில்லை. ரணசிங்க பிரேம தாசவும் '13' ஐ ஆதரவிக்கவில்லை.

அதிகாரப் பகிர்வை பற்றி பேசி ஆட்சிக்கு வந்த சந்திரிக்காவும் '13' ஐ முழுமையாக அமுலாக்கவில்லை.

இந்த மண்ணில் "13" ஐ முழுமையாக அமுல்படுத்த முடியாது. ஏனெனில் நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களே அதில் உள்ளன.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட நாட்டுக்கு புதிய அரசமைப்பு அவசியம்.

அதற்காகவே கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு நாட்டு மக்கள் வாக்களித்தனர். அரசமைப்பு மறுசீரமைப்புக்காகவே பாராளுமன்ற தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு வழங்கப்பட்டது. மக்களின் இந்த ஆணைக்கு புறம்பாக செயற்பட முடியாது-என்றார். (அ)

## பொது....

இனி எந்தவொரு வாகனத்தையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

வாகன இறக்குமதி தொடர்பான அறிக்கையை தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகம் விசேட குழுவொன்றை நியமித்திருந்தது.

வாகனங்களின் தேவைகள், வீதிகளுக்கான இட வசதி, எரிபொருள் செலவு போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தப்படுவதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார். (அ)

## இலங்கையில்....

அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயங்கள் அனைத்தும் மக்களுக்கான குரல்களை வழங்கும். அவர்கள் வாக்களிப்பின் மூலம் தங்கள் கருத்துக்களை வெளியிடமுடியும். தங்கள் தலைமையை தெரிவு செய்ய முடியும் என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் நடைபெறவேண்டிய தேர்தல்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம். சுதந்திரமான நியாயமான தேர்தல் இடம்பெறுவதை எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் கூறினார். (அ)

## சுவஸ்திகாவுக்கு....

இதனையடுத்து சட்டத்தரணி சுவஸ்திகா மீளவும் அழைக்கப்பட்டு சட்டத்துறையில் தனது உரையினை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை உருவாக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர்கள், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று காலை முதல் பல்கலைக்கழக விஞ்ஞான பீட வளாகத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாட மாணவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதற்கு பதில் கிடைக்காத நிலையில் மாணவர்களால் பிரதான நுழைவாயில் மூடப்பட்டு போராட்டம் இடம்பெற்றது.

இதனையடுத்தே சுவஸ்திகாவுக்கு சார்பாக வெளியிட்ட அறிக்கையை திரும்பப் பெற்றதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (அ)

# இரண்டாவது நாளாகவும் போராட்டம்

அம்பாறை,நவ. 10

தபால் ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து செய்யப்படுவதாக தபால் மா அதிபரால் அறிவிக்கப்பட்டும், தபால் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்துதவற்கான வர்த்தமானி அறிவித்தலில் தபால்துறை அமைச்சர் கையெழுத்திட்ட நிலையிலும் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் திட்டமிட்டபடி நேற்று வியாழக்கிழமையும் வெற்றிகரமாக இடம்பெற்றது.

இதனால் நாடளாவிய ரீதியில் தபால் சேவைகள் முற்றாக முடங்கியதுடன், இரண்டாவது நாளாகவும் தபாலகங்கள் உப தபாலகங்கள் மூடப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன.

பழம் பெருமை மிக்க நுவரெலிய தபால் நிலையத்தையும், அத்தகைய பெருமை மிக்க கண்டி தபாலகத்தையும் விற்பனை செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்க முன்னணி இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.

48 மணி நேர இந்த வேலை நிறுத்தப் போராட்டம், எத்தகைய அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் குறிப்பிட்டபடி நேற்று வியாழக்கிழமையும் முழு வெற்றிகரமாக இடம்பெற்றது.

இதேவேளை மேற்படி போராட்டத்தின் முக்கியஸ்த்தர்களான தொழிற் சங்கத்தலைவர்கள், கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்தை மகா நாயக்க தேரர்களைச் சந்தித்து இது விடயமாக மகஜர் ஒன்றை சமர்ப்பித்து விளக்கமளித்துள்ளதுடன், நாட்டின் இந்த பாரம்பரிய சொத்துக்களை விற்பனை செய்யவிடாது பாதுகாக்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளதாகவும்,



அரசாங்கம் தமது கோரிக்கையை உதாசீனம் செய்யுமாயின் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும் நிலைக்கு தபால் தொழிற் சங்கங்கள் தள்ளப்படலாமெனவும் தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் யூ.எல்.எம்.பைஸர் தெரிவித்தார். (அ-06)

## கிரிக்கெட்....

தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய சட்ட கட்டமைப்பை சட்டமூலம் ஊடாக அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐ.சி.சியின் தலைவர் தனியார் விமானத்தில் வருகை தந்து, ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதியின் பிரதானி சாகல ரத்நாயக்கவை சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கை கிரிக்கெட் சபைக்கு உள்ள அநாவசிய அழுத்தங்களை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார் என எமக்கு தெரியவந்துள்ளது. அவரைப் பொறுத்தவரை இலங்கை கிரிக்கெட் சபையை பாதுகாக்க வேண்டும்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இடம்பெற சிறிது காலத்திற்கு முன்னர் எதற்காக எல்.பி.எல். போட்டியை நடத்த வேண்டும் இதனால்தான் சிறந்த வீரர்கள் காயமடைந்தார்கள். உலகக் கிண்ணத் தொடரிலும் இவர்களால் விளையாட முடியாமல்போனது.

ஐ.சி.சி.யின் தலைவர்தான் எல்.பி.எல். போட்டியை உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இடம்பெற சிறிது காலத்துக்கு முன்பாக நடத்துமாறு இலங்கை கிரிக்கெட் சபைக்கு பணித்தாரோ தெரியவில்லை.

கிரிக்கெட் விளையாட்டில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. எனவே இலங்கை கிரிக்கெட் சபையின் குழப்பத்தின் பின்னணியில் இந்தியாவின் ஆதிக்கம் இருப்பதாக சந்தேகிக்க வேண்டியுள்ளது.

கிரிக்கெட் சபை இந்த ஆண்டு 6 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இலாபம் பெறும் நோக்கத்தில் கிரிக்கெட் சபை உருவாக்கப்படவில்லை.

பாடசாலை கிரிக்கெட் அணிகளை தேசிய மட்டத்தில் கொண்டு செல்ல வேண்டும். திறமையான கிரிக்கெட் அணியை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படை கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் கிரிக்கெட் சபை செயற்படுகிறது.

கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு வேண்டிய வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு போதிய நிதியில்லை என்று குறிப்பிடப்படுகிறது.

ஆனால் சபையின் ஆலோசகராக தெரிவு செய்யப்பட்ட மஹேல ஜயவர்தனவுக்கு மாதம் 27 ஆயிரம் டொலர் சம்பளம் வழங்கப்படுகிறது.நான் நினைத்தேன் இவர் சேவை அடிப்படையில்தான் ஆலோசனை வழங்குகிறார் என்று நான் நினைத்தேன். இந்த விடயம் பற்றி அவர் ஏதும் குறிப்பிட்டால் நான் பல விடயங்களை வெளிப்படுத்துவேன்-என்றார். (அ)

# 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' நூல் அறிமுகம் திருமலையில்

நிந்தவூர், நவ. 10

சிரேஷ்ட ஊடகவியலாளரும், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவருமான இரா.துரைரெத்தினத்தின் "கிழக்கில் சிவந்த சுவடுகள்" நூல் அறிமுக விழா திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

திருமலை கலை, இலக்கிய மன்றத்தினரின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை, திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இந்த அறிமுக விழா நடைபெறவுள்ளது.

எழுத்தாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமலை நவம் தலைமையில் நடைபெறவிருக்கும் அறிமுக விழாவில், முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.தண்டாயுதபாணி முதன்மை விருந்தினராகவும், சிரேஷ்ட எழுத்தாளர் க.தேவ கடாட்சம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் இரா. துரைரெத்தினத்தின் மேற்படி கிழக்கில் சிவந்த சுவடுகள் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் மட்டக்களப்பில் வெகு சிறப்பாக நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கில் நடந்த படுகொலைகளின் ஆவணத்தொகுப்பாக இந்த நூல் அமைந்திருப்பது முக்கியத்துவமிக்கதாகும்.

1956 ஆம் ஆண்டு முதல் அண்மைக் காலம் வரை கிழக்கில் நடந்த படுகொலைகளை ஆவணப்படுத்தும் முயற்சியாக கிழக்கில் சிவந்த சுவடுகள் நூலைக் கொள்ளலாம்.

பாதிக்கப்பட்ட மக்கள் வழங்கிய வாக்கு மூலங்கள், பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், செய்திகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இரா. துரைரெத்தினம் இந்த நூலை எழுதியுள்ளார். (அ-06)

## வரியை....

மற்றும் சேவைகளுக்காக அறவிடப்படும் வரிகளை வானளவு உயர்த்துகின்றனர். இதை தவிர வேறு எதுவும் அரசாங்கத்துக்கு தெரியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரி அதிகரிப்பு, வரி விதிப்பு, பெறுமதி வாய்ந்த இடங்களை விற்பனை செய்வதுதான் அரசாங்கம் முன்மொழியும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் என்றால், அவ்வாறான அரசாங்கமொன்று அவசியமில்லை.

8 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மின்சாரப் பாவனையை கைவிட்டுள்ளனர். இவ்வாறு செல்ல முடியாது. மக்களின் நலன் மீது அரசாங்கம் அக்கறை கொள்ள வேண்டும்.

பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தி விட்டோம் என்கின்றனர். ஆனால், நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில்தான் உள்ளது. அதனால் நாட்டில் வேலைவாய்ப்பு இல்லாது இளைஞர், யுவதிகள் திண்டாடி வருகின்றனர்.

12 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு பறியோயுள்ளது. இரண்டாயிரம் வரையிலான நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. நிலைமை இவ்வாறிருக்க வரவு - செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பை தவிர வேறு எந்தவொரு தீர்வும் பொருளாதார அபிவிருத்திக்காக முன்மொழியப்படவில்லை.

இதேவேளை, நுவரெலியா தபால் நிலையம் என்பது மிகவும் பெறுமதி வாய்ந்த ஒரு சொத்தாகும். நாட்டில் போதியளவு ஹோட்டல்கள் உள்ளன. ஆனால், 180 வருடம் பழமை வாய்ந்த கட்டடங்களை தேடுவது கடினமாகும்.

நுவரெலியா தபால் நிலையத்தை விற்பனை செய்வதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் - என்றார். (அ)

## மருத்துவர்கள்....

இன்றி எதிர்வரும் காலங்களில் மூடப்படவுள்ள மருத்துவப் பிரிவுகளின் எண்ணிக்கை 95 எனவும், சேவைகள் பாதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள் மற்றும் விசேட வைத்திய பிரிவுகளின் எண்ணிக்கை 150 எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## சப்ரகமுவ....

மாணவர்கள் சிலருக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், மருதானை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்களை கலைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். (அ)

## கிரிக்கெட் சபை....

பாராளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்ததன் பிரகாரம் 'இலங்கை கிரிக்கெட்டில் இருந்து தலைவர் உள்ளிட்ட ஊழல் அதிகாரிகளை பதவி நீக்கம்' என்ற பிரேரணை மீதான விவாதம் நேற்றுக் காலை 09.30 மணி முதல் 05.30 மணி வரை இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை ஆளுங்கட்சியால் ஆமோதிக்கப்பட்டது.

ஊழலற்ற, வெளிப்படையான கிரிக்கெட் நிர்வாகத்தை உருவாக்கவும், கிரிக்கெட் சபைக்கான புதிய சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் இந்த பிரேரணை நிறைவேற்றும் எனவும் கூறப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஆசிரியர் சங்க அறிக்கைக்கு எதிராக யாழ். பல்கலை மாணவர் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கைக்கு எதிராக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் போராட்டமொன்று முன்னெடுக் கப்பட்டது.

நேற்று காலை பல்கலைக்கழக விஞ்ஞான பீட வளாகத்தில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஒக்ரோபர் 31ஆம் திகதி அன்று யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறையினரால் ஏற்பாடு செய்யப் பட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் “நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்” என்ற தலையங்கத்திலே உரையாற்ற இருந்தார். இந்த உரையாடல் இறுதி நேரத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பிரிவினரின் நெருக்குதலின் காரணமாக கைவிடப்பட்டது.

இந்நிலையில் சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கம் மீளவும் அழைக்கப்பட்டு சட்டத்துறையில் தனது உரையை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை உருவாக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,



ஆசிரியர்கள், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த அறிக்கைக்கு எதிராகவே நேற்று பல்கலைக் கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# யாழ். மாவட்டத்தில் மழையால் 7 வீடுகள் பகுதியளவில் சேதம்!

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையால் இதுவரை ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 7 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

இதுவரையான மழை வீழ்ச்சி குறித்து வினவும்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொலிகண்டி கிழக்கு பகுதியிலேயே இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு இதுவரைக்கும் 836.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், நேற்று முன் தினம் இரவு 8.11 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது-என்றார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் யாழ்.இளைஞர், யுவதி நேற்று கைது

கொழும்பு, நவ. 10

சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற இளைஞரும், யுவதியும் கட்டுநாயக்க குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப் பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞரும் 19 வயது யுவதியுமாவார்.

இவர்கள் டுபாய் செல்வதற்காக நேற்று பிற்பகல் 01.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் பயண அனுமதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பித்த ஆவணங்கள் தொடர்பில் சந்தேகமடைந்த அதிகாரிகள் அவர்களை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

குறித்த நபர்களின் கடவுச்சீட்டுகளை பரிசோதித்த அதிகாரிகள் பிரான்ஸ் மற்றும் ஜப்பானுக்கு செல்வதற்காக போலியான தகவல்களுடன் இரண்டு போலி விஸாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

விசாரணையின்போது தாம் தரகர் ஒருவரால் அனுப்பப்பட்டதாகவும் அவர்கள் செல்லும் இடம் குறித்து தமக்கு தெரியாது எனவும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தங்காலை கடலில் மூழ்கி ஜேர்மன் பிரஜை மரணம்!

கொழும்பு, நவ. 10

தங்காலை கடலில் நீராடியபோது ஜேர்மன் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தங்காலை பொலிஸார் கூறினர்.

49 வயதுடைய ஜேர்மன் பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக தங்காலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தங்காலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ள.(அ)

# காஸா மீதான தாக்குதலை கண்டித்து கொழும்பில் கவனயீர்ப்பு போராட்டம்!

கொழும்பு, நவ. 10

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலையும், இனப்படுகொலையையும் நிறுத்துமாறு வலியுறுத்தி கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகக் கவனயீர்ப்புப்போராட்டமொன்று நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சோசலிஸ சமத்துவக் கட்சியினால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (அ)




# ஆரையம்பதியில் பஸ் தீவைத்து எரிப்பு



மட்டக்களப்பு, நவ. 10

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்று இனந்தெரியாதவர்களினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஆரையம்பதி பிரதான வீதியில் குறித்த பஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு - பொத்துவில் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை 7 மணி அளவில் நிறுத்தி வைக்கப்பட்டு உரிமையாளர் தனது சொந்த இடமான கொக்கட்டிச்சோலைக்குச் சென்று விட்டார்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3:30 மணியளவில் குறித்த பஸ் தீப்பற்றி எரிவதாக கிடைத்த தகவலை அடுத்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து காத்தான்குடி பொலிஸார் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்டபோது பஸ் முற்றாக எரிந்து சாம்பராகி உள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு படையினர் குறித்த தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் பஸ் முற்றாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பஸ் ஒரு கோடி ரூபாய் பெறுமதியானது என காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# மதுபான விருந்தில் கடற்படைச் சிப்பாயை ஆயுதத்தால் தாக்கிக் கொன்ற சக சிப்பாய்!

## திருமலை திஸ்ஸ கடற்படை முகாமில் சம்பவம்!

திருமலை, நவ. 10

திருகோணமலை திஸ்ஸ கடற்படை முகாமில் மதுபான விருந்து ஒன்றின்போது ஏற்பட்ட தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கடற்படை சிப்பாய் ஒருவர் கொல லப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு கடற்படை சிப்பாயைக் கைது செய்துள்ளதாக திருகோணமலை துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மாத்தளை கந்தேகெதர பகுதியைச் சேர்ந்த கே.எம்.தம்மிக்க சுவர்ண பண்டார (வயது-36) என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான கடற்படை சிப்பாயும் அதே முகாமில் பணிபுரியும் மாத்தளை இம்புல்கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த (வயது-42) வயதுடையவர் ஆவார்.

நேற்று முன் தினம் கடற்படைத் தளத்திலுள்ள மதுபான விடுதியில் கடற்படையைச் சேர்ந்த நான்கு பேர் மதுபான விருந்து நடத்திய போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (அ)

# மன்னாரில் காற்றாலை மின் நிலையம் அதானி குழுமத்துடன் புதிய ஒப்பந்தம்!

கொழும்பு, நவ. 10

மன்னாரில் 250 மெகாவாட் திறன் கொண்ட புதிய காற்றாலை மின் நிலையத்தை அமைப்பதற்காக, இந்தியாவின் அதானி குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் பணி விரைவுப் படுத்தப்படுகின்றது.

இலங்கையின் மின்சக்தி அமைச்சு இதற்கான நடைமுறையை விரைவுபடுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

இதன்படி நவம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து உடன்படிக்கைகளையும் கைச்சாத்திடுவதற்கு அமைச்சு தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# நெதர்லாந்துக்கு எதிராக சதம் குவித்த ஸ்டோக்ஸ்




பூனே, மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்க விளையாட்டரங்கில் புதன்கிழமை நடைபெற்ற நெதர்லாந்துக்கு எதிரான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் 160 ஓட்டங்களால் இங்கிலாந்து மிகவும் அவசியமான வெற்றியை ஈட்டியது.

இந்த வெற்றியுடன் அணிகள் நிலையில் 4 புள்ளிகளுடன் 7ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ள இங்கிலாந்து, சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கான வாய்ப்பை சற்று அதிகரித்துக்கொண்டுள்ளது.

பென் ஸ்டோக்ஸ் குவித்த முதலாவது உலகக் கிண்ண சதம், டாவிட் மலான், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் பெற்ற அரைச் சதங்கள், மொயீன் அலி, ஆதில் ரஷித் ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சுகள் இங்கிலாந்துக்கு அவசியமான வெற்றியை ஈட்டிக்கொடுத்தன.

முதல் சுற்றுடன் வெளியேறவுள்ள நடப்பு உலக சம்பியன் இங்கிலாந்து தான் விளையாடிய 7 போட்டிகளில் ஒன்றில் மாத்திரமே வெற்றிபெற்றிருந்தது.

இதன் காரணமாக இந்தப் போட்டியில் வெற்றிபெற வேண்டும் என்ற கங்கணத்துடன் களம் இறங்கிய இங்கிலாந்து அதனை நிறைவேற்றிக்கொண்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இங்கிலாந்து 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 339 ஓட்டங்களைக் குவித்தது.

மத்திய வரிசையில் பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ் ஆகியோரின் துடுப்பாட்டங்களே இங்கிலாந்துக்கு 300 ஓட்டங்களைக் கடக்க உதவியது.

முதலாவது விக்கெட்டில் ஜொனி பெயாஸ்டோவுடன் 48 ஓட்டங்களைப் பகிர்ந்த டாவிட் மாலன், 2ஆவது விக்கெட்டில் ஜோ ரூட்டுடன் மேலும் 85 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

பெயாஸ்டோவ் (15), ஜோ ரூட் (28) ஆகியோர் ஆட்டம் இழந்த பின்னர் (133 - 2 விக்.) விக்கெட்கள் சீரான இடைவெளியில் சரிந்தன.

36ஆவது ஓவரில் மொத்த எண்ணிக்கை 192 ஓட்டங்களாக இருந்தபோது இங்கிலாந்தின் 6ஆவது விக்கெட் வீழ்த்தபட்டது.

ஆனால், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ் ஆகிய இருவரும் 7ஆவது விக்கெட்டில் 129 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்தை பலமான நிலையில் இட்டனர்.

கிறிஸ் வோக்ஸ் 51 ஓட்டங்களைப் பெற்றார்.

மறுபக்கத்தில் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய பென் ஸ்டோக்ஸ் 74 பந்துகளில் 10 பவுண்டறிகள், 2 சிக்ஸ்களுடன் 108 ஓட்டங்களைப் பெற்று 9ஆவதாக ஆட்டம் இழந்தார். முதல் 50 ஓட்டங்களை 54 பந்துகளில் பெற்ற ஸ்டோக்ஸ், அடுத்த 50 ஓட்டங்களை 20 பந்துகளில் குவித்தமை விசேட அம்சமாகும்.

பந்துவீச்சில் பாஸ் டி லீட் 74 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஏரின் டட் 67 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் லோகன் வென் பீக் 88 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

340 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து 37.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் டேஜா நிடாமனுரு (41), அணித் தலைவர் ஸ்கொட் எட்வேர்ட்ஸ் (38), வெஸ்லி பரெசி (37) சைப்ரேண்ட் எங்க்ள்ப்ரெச் (33) ஆகிய நாலவரே 30 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

ஏனைய துடுப்பாட்ட வீரர்களில் பாஸ் டி லீட் (10) மாத்திரமே இரட்டை இலக்க எண்ணிக்கையைப் பெற்றார்.

பந்துவீச்சில் மொயீன் அலி 42 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஆதில் ரஷித் 54 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் டேவிட் வில்லி 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



## இகா ஸ்வியாடெக் சம்பியன்

மெக்சிகோ, பல முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றிருந்த டபிள்யூடிஏ ரென்னிஸ் தொடர் கடந்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகி, கடந்த புதன்கிழமை நிறைவடைந்தது. இந்த தொடரின் இறுதிப்போட்டிக்கு போலந்து நாட்டை சேர்ந்த இகா ஸ்வியாடெக் மற்றும் அமெரிக்க வீராங்கனை பெகுலா முன்னேறினர்.

தங்களது அரையிறுதி ஆட்டங்களில் இகா ஸ்வியாடெக் - சபலென்காவையும், பெகுலா - கோகோ காப்பையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றனர்.

இறுதிப்போட்டியில் ஸ்வியாடெக் பெகுலாவை எளிதில் வீழ்த்தினார். 59 நிமிடங்கள் நடந்த இந்த போட்டியில் ஸ்வியாடெக் 6-1 மற்றும் 6-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் ஸ்வியாடெக் பெண்களுக்கான ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.



## குடியிருப்புக்களை புனரமைக்க எலினா ஸ்விடோலினா நிதியுதவி

உக்ரைன் ரென்னிஸ் நட்சத்திரமான எலினா ஸ்விடோலினா, ரஷ்யாவுடனான மோதலில் அழிக்கப்பட்ட மக்கள் குடியிருப்புக்களை புனரமைப்பு செய்ய நிதியுதவி வழங்கியுள்ளார்.

இந்நிலையில் போரினால் தங்கள் வீடுகளை இழந்தவர்களுக்காக மீண்டும் புனரமைப்பு செய்யப்படும் மக்களின் குடியிருப்பை பார்வையிடுவதற்காக அவர் இர்பினுக்குச் சென்றுள்ளார்.

17 சம்பியன் பட்டங்களை வென்ற உலகின் 25 ஆம் நிலை வீராங்கனையான எலினா ஸ்விடோலினா, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவதற்காக நிதியுதவியும் திரட்டியிருந்தார்.

உக்ரைனின் யுனைடெட் தொண்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக இதுவரை மொத்தம் 18 வீடுகள் மீண்டும் கட்டப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரியில் இருந்த நிலையில் இருந்து மீண்டு தற்போது மக்கள் தமது சொந்த இடங்களுக்குள் திரும்புவதை கண்டு மகிழ்ச்சியடைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## முதலிடத்தில் முகமது சிராஜ்

ஒரு நாள் போட்டிக்கான துடுப்பாட்டக்காரர்கள் மற்றும் பந்து வீச்சாளர்களின் புதிய தரவரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டது.

துடுப்பாட்டக்காரர்கள் பட்டியலில் இந்தியாவின் இளம்வீரர் சுப்மன் கில் முதல் இடம் பிடித்து அசத்தியுள்ளார். இந்நிலையில், பந்து வீச்சாளர்கள் பட்டியலில் இந்தியாவின் முகமது சிராஜ் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

தென்னாபிரிக்காவின் கேசவ் மகாராஜ் 2ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் ஆடம் ஜாம்பா 3ஆவது இடத்திலும் உள்ளனர் .இந்தியாவின் குல்தீப் யாதவ் 4ஆவது இடத்திலும், பாகிஸ்தானின் ஷாகின் அப்ரிடி 5ஆவது இடத்தில் உள்ளனர்.

இந்திய வீரர்கள் ஜஸ்பிரித் பும்ரா 8ஆவது இடத்திலும், முகமது ஷமி 10ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர்.

## வக்கார் யூனிசிற்கு எதிராக பங்களாதேஷ் நீதிமன்று தீர்ப்பு



பங்களாதேசிற்கு எதிரான போட்டியில் அஞ்சலோ மத்தியுஸ் ஆட்டமிழப்பு தொடர்பில் விமர்சனம் செய்தமை குறித்து பங்களாதேஸ் நீதிமன்றம் பாக்கிஸ்தானின் முன்னாள் வீரர் வக்கார் யூனிசிற்கு எதிராக தீர்ப்பு வழங்கியுள்ளது.

உலகக்கிண்ண தொடரின் வர்ணணையாளர்கள் குழுவிலிருந்து வாக்கார் யூனிசை விலக்கவேண்டும் என பங்களாதேஸ் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஐ.சி.சியிடம் ஏன் முறைப்பாடு செய்யக்கூடாது என நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

தனது இந்த தீர்ப்பு தொடர்பில் பங்களாதேஸ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை 10 நாட்களிற்குள் பதிலளிக்க வேண்டும் என நீதிமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்தியுசின் ஆட்டமிழப்பின்போர் வக்கார் யூனிஸ் பங்களாதேஸ் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் செயற்பட்ட விதத்தினை கடுமையாக விமர்சித்திருந்தார்.

# இஸ்ரேலை அழிப்பதாக மிரட்டும் ஹெஸ்பொலாவின் தலைவருக்கு ஏன் இவ்வளவு செல்வாக்கு?

**கிவான் ஹுசைனி**

ஹசன் நஸ்ரல்லா ஒரு ஷியா ஆலிம் (மத அறிஞர்). லெபனானில் உள்ள ஹெஸ்புலா குழுவிற்கு தலைமை தாங்குகிறார். இந்த குழு தற்போது லெபனா னில் உள்ள மிக முக்கியமான அரசியல் கட்சிகளில் ஒன் றாக கருதப்படுகிறது. இந்தக் குழுவுக்கு தனியாக ஒரு ஆயுதப் பிரிவும் இருக்கிறது.

லெபனான் மற்றும் பிற அரபு நாடுகளில் பிரபலமான ஹசன் நஸ்ரல்லா, ஹெஸ்புலாவின் மையப்புள்ளியாகக் கருதப்படுகிறார். இந்த குழுவின் வரலாற்றில் அவர் ஒரு மிக முக்கிய பங்கைக் கொண்டிருக்கிறார்.

அவர் ஈரான் நாட்டு அதி உயர் தலைவரான அலி கமேனியுடன் மிகவும் நெருக்கமான, சிறப்பு வாய்ந்த உறவுகளைக் கொண்டுள்ளார். அமெரிக்காவால் ஹெஸ்புலா பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்டபோதிலும், ஈரானின் தலைவர்களோ அல்லது நஸ்ரல்லாவோ தங்கள் நெருங்கிய உறவுகளை ஒருபோதும் மறைக்கவில்லை.



ஹசன் நஸ்ரல்லாவுக்கு எதிரிகள் உள்ளதைப் போலவே ஆர்வம் மிக்க ஆதரவாளர்களும் இருக்கின்றனர். இதனாலேயே, இஸ்ரேலால் கொலை செய்யப்படும் அச்சம் காரணமாக அவர் பல ஆண்டுகளாக பொதுவெளியில் காணப்படுவதில்லை. ஆனால் இந்த காரணத்தினால் அவரது ஆதரவாளர்கள் அவரது பேச்சுகளை அதிகமாகக் கேட்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இத்தகைய பேச்சுகள் உண்மையில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் நஸ்ரல்லாவின் முக்கியமான ஆயுதமாகும். இந்த வழியில் அவர் லெபனான் மற்றும் உலகில் உள்ள பல்வேறு பிரச்னைகளைப் பற்றி கருத்துரைத்து தனது போட்டியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிக்கிறார்.

லெபனானில் உள்ள பலர் 2006 இல் இஸ்ரேலுக்கு எதிரான ஹெஸ்புலாவின் பேரழிவுகரமான ஒரு மாத காலப் போரை இன்னும் நினைவில் வைத்திருக்கிறார்கள். மேலும், இக்குழு நாட்டை மற்றொரு போருக்குத் தள்ளக் கூடும் என்று அஞ்சுகின்றனர்.

ஹெஸ்புலாவின் நோக்கங்களில் ஒன்று இஸ்ரேலை அழிப்பதாகும். அந்த குழுவை ஹமாஸை விட பலம் வாய்ந்த எதிரியாக இஸ்ரேல் பார்க்கிறது. இஸ்ரேலியப் பகுதிகளை நீண்ட தூரத்தில் தாக்கக்கூடிய ஏவுகணைகள் உட்பட ஏராளமான ஆயுதங்கள் ஹெஸ்புலாவிடம் உள்ளன. பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான போர் வீரர்களையும் கொண்டுள்ளது.

இந்த சர்ச்சையில் ஹெஸ்புலா இரண்டாவது தாக்குதலைத் தொடங்கியது. அதற்கு "கற்பனை செய்ய முடியாத" பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.



ஒரு முழு அளவிலான போர் லெபனானுக்கு பேரழிவை ஏற்படுத்தும் என்பதால் அதற்கு பொதுமக்களின் ஆதரவு குறைவாக உள்ளது. லெபனான் பல ஆண்டுகளாக பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அரசியல் முட்டுக்கட்டை காரணமாக ஒழுங்காக செயல்படும் அரசாங்கமும் அங்கு இல்லை.

இந்தக் குழுக்களின் மீது ஈரானுக்கு எந்தளவு நேரடிச் செல்வாக்கு உள்ளது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி, இஸ்ரேலின் குற்றங்கள் எல்லை மீறிவிட்டதாக கூறியிருந்தார். எதையும் செய்ய வேண்டாம் என்று வாஷிங்டன் சொல்கிறது. ஆனால் அது பெரிய அளவில் இஸ்ரேலை ஆதரித்து வருகிறது என்று அவர் கூறியிருந்தார்.

ஹெஸ்புலாவுக்கு நெருக்கமான ஒருவர், கடந்த வாரம் பெயர் தெரியாத வகையில் பேசிய போது, இஸ்ரேலுக்கு எதிரான மற்றும் அமெரிக்க எதிர்ப்பு பேச்சுகளுக்கு பெயர் பெற்ற ஹசன் நஸ்ரல்லா, நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், அவர் பகிரங்கமாக மௌனமாக இருந்த போதிலும், குழுவிற்கு நெருக்கமாக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், லெபனான் ராணுவத் தலைமையுடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளது என்றும் கூறினார்.

### குழந்தை பருவம் மற்றும் இளமைக்காலம்

ஹசன் நஸ்ரல்லா பிறந்த சிறிது நேரத்திலேயே லெபனானில் உள்நாட்டுப் போர் தொடங்கியது.

அவர் பெய்ரூட்டின் கிழக்கு பகுதியில் ஏழைகள் வசிக்கும் பகுதியில் பிறந்தார். அவரது தந்தை ஒரு சிறிய கடையின் உரிமையாளராக இருந்தார். அவருடைய ஒன்பது குழந்தைகளில் ஹசன் நஸ்ரல்லா மூத்தவர்.

லெபனானில் உள்நாட்டுப் போர் தொடங்கியபோது, அவருக்கு ஐந்து வயதாக இருந்தது. லெபனான் குடிமக்



கள் மதம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டபோது, பதினைந்து ஆண்டுகளாக அந்த சிறிய மத்திய தரைக்கடல் நாட்டில் பேரழிவை ஏற்படுத்திய நாசகரமான போர் அது.

அந்த நேரத்தில், கிறிஸ்தவம் மற்றும் சன்னி இஸ்லாமியப் போராளிக் குழுக்கள் வெளிநாடுகளில் இருந்து உதவி பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டது.

போர் தொடங்கியதன் காரணமாக, ஹசன் நஸ்ரல்லாவின் தந்தை பெய்ரூட்டை விட்டு வெளியேறி, ஷியா இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வசித்து வந்த தெற்கு லெபனானில் உள்ள தனது சொந்த கிராமத்திற்குத் திரும்ப முடிவு செய்தார்.

பதினைந்து வயதில், ஹசன் நஸ்ரல்லா அக்காலத்தின் மிக முக்கியமான லெபனான் ஷியா அரசியல்-ராணுவக் குழுவான அமல் இயக்கத்தில் உறுப்பினரானார். இது ஒரு வேகமான மற்றும் சுறுசுறுப்பான குழுவாக அப்போது இருந்தது. அக்குழுவுக்கான அடித்தளத்தை ஈரான் நாட்டைச் சேர்ந்த மூசா சதர் வலுவாக அமைத்தார்.

அந்த நேரத்தில், நஸ்ரல்லா தனது மார்க்கக் கல்வியையும் தொடங்கினார். நஸ்ரல்லாவின் ஆசிரியர்களில் ஒருவர், அவர் ஷேக் ஆவதற்கான பாதையைத் தேர்ந்தெடுத்து நஜாப் நகருக்குச் செல்லுமாறு பரிந்துரைத்தார்.



ஹசன் நஸ்ரல்லா இக்கருத்தை ஏற்று பதினாறாவது வயதில் ஈராக் நகரான நஜாப்பை அடைந்தார்.

நஜாப்பில் ஹசன் நஸ்ரல்லா இருந்தபோது, ஈராக் ஒரு நிலையற்ற நாடாக இருந்தது. இருபது ஆண்டுகளாக தொடர்ச்சியான புரட்சி, ரத்தக்களரியுடன் கூடிய கிளர்ச்சி மற்றும் அரசியல் படுகொலைகளால் ஆளப்பட்டு வந்தது. அந்த காலகட்டத்தில், அப்போதைய ஈராக்கில் துணை அதிபர் சதாம் ஹுசைன் கணிசமான அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.

ஹசன் நஸ்ரல்லா நஜாப்பில் வசிக்கத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் கழித்து, பாத் கட்சித் தலைவர்கள், குறிப்பாக சதாம் ஹுசைனின் முடிவுகளில் ஒன்று, ஈராக் மதரஸாக்களில் இருந்து அனைத்து லெபனான் ஷியா மாணவர்களையும் வெளியேற்றுவது ஆகும்.

ஹசன் நஸ்ரல்லா நஜாப்பில் இரண்டு வருடங்கள் மட்டுமே படித்தார். ஆனால் நஜாப்பில் இருந்தது இந்த இளம் லெபனானியரின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நஜாப்பில் அப்பாஸ் மூசாவி என்ற மற்றொரு அறிஞரையும் அவர் சந்தித்தார்.

ஒரு காலத்தில் மௌசவி லெபனானில் இருந்த மூசா சதரின் சீடர்களில் ஒருவராகக் கணக்கிடப்பட்டார். ஈரானின் புரட்சிகர தலைவர் அயதுல்லா கொமேனியின் அரசியல் பார்வையால் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டிருந்தார். அவர் நஸ்ரல்லாவை விட எட்டு வயது மூத்தவர் என்பதுடன் ஒரு கடுமையான மற்றும் திறமையான தலைவர் என்ற இடத்தை விரைவில் அடைந்தார்.

லெபனானுக்குத் திரும்பிய பிறகு, அவர்கள் இருவரும் உள்ளூரில் நடந்த உள்நாட்டுப் போரில் பங்கேற்றனர். ஆனால் இந்த முறை நஸ்ரல்லா அப்பாஸ் மௌசவியின் சொந்த ஊருக்குச் சென்றார். அங்கு பெரும்பாலான மக்கள் ஷியா இஸ்லாமியர்களாக இருந்தனர்.

அந்த காலகட்டத்தில், நஸ்ரல்லா அமல் இயக்கத்தில்



உறுப்பினரானார். மேலும் அப்பாஸ் மௌசவி கட்டிய மதரஸாவில் கல்வியைத் தொடர்ந்தார்.

### ஈரானிய புரட்சி மற்றும் ஹெஸ்புலாவின் தோற்றம்

ஹசன் நஸ்ரல்லா லெபனானுக்குத் திரும்பி ஒரு வருடம் கழித்து, ஈரானில் ஒரு புரட்சி ஏற்பட்டது என்பதுடன் ருஹோல்லா கொமேனி ஆட்சியைப் பிடித்தார். அங்கிருந்து, இரானுடனான லெபனானின் ஷியா சமூகத்தின் உறவுகள் முற்றிலும் மாறியது மட்டுமல்லாமல், அவர்களின் அரசியல் வாழ்க்கை மற்றும் ஆயுதப்

(மறுபக்கம் பார்க்க)

போராட்டமும் ஈரானில் நடைபெறும் நிகழ்வுகள் மற்றும் அணுகுமுறைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

ஹசன் நஸ்ரல்லா பின்னர் ஈரானின் அப்போதைய தலைவர்களை தெஹ்ரானில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக்குப் பின் கொமேனி அவரை லெபனானில் தனது பிரதிநிதியாக மாற்றினார்.

இங்கிருந்துதான் ஹசன் நஸ்ரல்லாவின் ஈரானுக்கான சுற்றுப்பயணங்கள் தொடங்கின. மேலும், ஈரானிய அரசாங்கத்தில் தீர்க்கமான மற்றும் சக்திவாய்ந்த மையங்களுடன் அவரது உறவுகள் வலுவடைந்தன.

லெபனானின் ஷியா இஸ்லாமிய சமூகத்துடனான உறவுகளுக்கு ஈரான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. மத்திய கிழக்கில் இஸ்ரேல் இருப்பதால், புரட்சிகர ஈரானின் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய முன்னுரிமைகளில் பாலஸ்தீன இயக்கமும் இருந்து வருகிறது.

இந்த காலகட்டத்தில், உள்நாட்டுப் போரில் மூழ்கிய லெபனான், பாலஸ்தீன போராளிகளுக்கு ஒரு முக்கிய தலமாக மாறியது. மேலும், இயற்கையாகவே பெய்ரூட்டைத் தவிர தெற்கு லெபனானில் அவர்கள் வலுவான நிலையில் இருந்துவருகின்றனர்.

லெபனானில் அதிகரித்து வரும் உறுதியற்ற தன்மைக்கு மத்தியில், இஸ்ரேல் லெபனானைத் தாக்கி, அந்த நாட்டின் முக்கியமான பகுதிகளை விரைவாகக் கைப்பற்றியது. பாலஸ்தீனத் தாக்குதலை எதிர்கொள்ள லெபனான் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறியது.

இஸ்ரேலிய தாக்குதலுக்குப் பிறகு, ஈரானில் உள்ள பாஸ்தரன்-இ-இன்க்லாப்-இ-இஸ்லாமியின் (இஸ்லாமியப் புரட்சியின் பாதுகாவலர்கள்) ராணுவத் தளபதிகள் லெபனானில் ஈரானுடன் தொடர்புடைய ராணுவக் குழுவை நிறுவ முடிவு செய்தனர். இந்த இயக்கம் தான்



ஹெஸ்பொலா அமைப்பு. ஹசன் நஸ்ரல்லாஹ் மற்றும் அப்பாஸ் மௌசவி ஆகியோர் உள்பட ஏராளமானோர் அமல் இயக்கத்தின் வேறு சில உறுப்பினர்களுடன் புதிதாக உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் இணைந்தனர்.

இந்த குழு லெபனானில் அமெரிக்க ராணுவத்துக்கு எதிராக ஆயுதமேந்திய தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அப்பகுதி அரசியலில் விரைவாக ஒரு முக்கியமான அமைப்பாக மாறியது.

ஹஸன் நஸ்ரல்லா ஹெஸ்புலா அமைப்பில் சேர்ந்த போது, அவருக்கு 22 வயதுதான் ஆகியிருந்தது. அப்போது அவர் புதியவராகக் கருதப்பட்டார்.

ஈரானுடனான ஹசன் நஸ்ரல்லாவின் உறவுகள் நாளுக்கு நாள் மிகவும் நெருக்கமடைந்தன. அவர் தனது மதக் கல்வியைத் தொடர ஈரானில் உள்ள கும் நகருக்குச் செல்ல முடிவு செய்தார். நஸ்ரல்லா இரண்டு ஆண்டுகள் கும்மில் படித்தார், இந்த காலகட்டத்தில் பாரசீக மொழியைக் கற்றுக்கொண்டார், மேலும் ஈரானிய மக்களிடையே நெருங்கிய நண்பர்களை உருவாக்கினார்.

அவர் லெபனானுக்கு திரும்பியதும் அவருக்கும் அப்பாஸ் மௌசவிக்கும் இடையே ஒரு பெரிய தகராறு ஏற்பட்டது. அப்போது மௌசவி சிரியாவின் அதிபர் ஹபீஸ் ஆசாத்தின் ஆதரவாளராக இருந்தார். ஆனால் ஹெஸ்பொலா அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய ராணுவத்தினரைத் தாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று நஸ்ரல்லா வலியுறுத்தினார்.

ஹெஸ்புலாவில் நஸ்ரல்லாவின் ஆதரவாளர்களின் எண்ணிக்கை குறைந்ததால், சில காலத்திற்குப் பிறகு அவர் ஈரானில் ஹெஸ்பொலாவின் பிரதிநிதி ஆக்கப்பட்டார். அதனால் அவர் மீண்டும் ஈரானுக்குத் திரும்பினார். ஆனால் ஹெஸ்புலாவிடம் இருந்து விலகிக் கொண்டார்.

அப்போது ஹெஸ்புலா மீது ஈரானின் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்து வருவது போல் தோன்றியது. ஹெஸ்புலாவின் தலைவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு அவருக்குப் பதிலாக சிரியாவை ஆதரித்த அப்பாஸ் மௌசவி புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

பொதுச்செயலாளர் டோஃபைலி அகற்றப்பட்ட பிறகு, ஹசன் நஸ்ரல்லா திரும்பி வந்து நடைமுறையில் ஹெஸ்பொலாவின் துணைத் தலைவரானார்.

**ஹெஸ்பொலாவின் தலைமை**

ஹெஸ்புலாவின் தலைவராக அப்பாஸ் மௌசவி தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள், அவர் இஸ்ரேலிய ஏஜென்டுகளால் படுகொலை செய்யப்பட்டார். அதே ஆண்டில், 1992 இல், அக்குழுவின் தலைவராக



ஹசன் நஸ்ரல்லா பொறுப்பேற்றுக்கொண்டார்.

அப்போது அவரது வயது 32. அந்த நேரத்தில், லெபனானில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஒரு வருடம் ஆகியிருந்தது. மேலும் ஹெஸ்புலாவின் அரசியல் பிரிவை அதன் ராணுவப் பிரிவுடன் இணைந்து நாட்டில் தீவிர ஆயுதக் குழுவாக மாற்ற நஸ்ரல்லா முடிவு செய்தார்.

இந்த உத்தியை பின்பற்றி லெபனான் பாராளுமன்றத்தில் 8 இடங்களை ஹெஸ்புலா அமைப்பு கைப்பற்றியது.

லெபனான் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த தைஃப் உடன்படிக்கையின் கீழ், ஹெஸ்பொலா தனது ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் இஸ்ரேல் தெற்கு லெபனானை ஆக்கிரமித்திருந்தது என்பதுடன் ஹெஸ்பொலா ஒரு ஆயுத இயக்கத்தை நடத்தி வந்தது.

லெபனானின் ஹெஸ்புலா குழு ஈரானிடம் இருந்து நிதி உதவியைப் பெற்று வந்தது. இதனால் ஹசன் நஸ்ரல்லா நாடு முழுவதும் பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் நிவாரண மையங்களை உருவாக்கினார். இந்த பொதுநல அம்சம் லெபனானில் ஹெஸ்புலாவின் அரசியல் இயக்க அடையாளத்தின் முக்கிய நடவடிக்கையாக மாறியது.

**ஹசன் நஸ்ரல்லாவின் செல்வாக்கு**

ஹசன் நஸ்ரல்லாஹ்வின் தலைமையில் ஹெஸ்புலா குழுவின் புகழ் கணிசமாக அதிகரித்தது.

2000 ஆம் ஆண்டில், இஸ்ரேல் லெபனானில் இருந்து முற்றிலும் வெளியேறுவதாகவும், அந்த நாட்டின் தெற்குப் பகுதியின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் அறிவித்தது. ஹெஸ்பொலா ஆயுதக் குழு இந்த நிகழ்வை மாபெரும் வெற்றியாகக் கொண்டாடியதுடன், இந்த வெற்றியை ஹசன் நஸ்ரல்லா பெற்றுக் கொண்டார்.

சமாதான உடன்படிக்கையின்றி இஸ்ரேல் ஒருதலைப்பட்சமாக ஒரு அரபு நாட்டின் பிரதேசத்தை விட்டு வெளியேறியது இதுவே முதல் முறையாகும். மேலும் இது அப்பகுதியில் பல அரபு குடிமக்களின் பார்வையில் குறிப் பிடத்தக்க வெற்றியாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அப்போதிருந்து, லெபனானின் ஆயுதப் பிரச்னை, லெபனானின் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு உள்ளிட்டவை முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது. லெபனானில் இருந்து இஸ்ரேல் வெளியேறிய தன் காரணமாக, ஹெஸ்புலா குழு ஆயுதம் ஏந்துவதற்கான சட்டப்பூர்வ திறனை இழந்தது. மேலும், வெளிநாட்டு சக்திகள் ஹெஸ்பொலாவை ஆயுதங்களை ஒப்படைக்குமாறு வலியுறுத்தின. ஆனால் ஹசன் நஸ்ரல்லா இதற்கு ஒருபோதும் உடன்படவில்லை.

2002 ஆம் ஆண்டில், ஹசன் நஸ்ரல்லா இஸ்ரேலுடன் கைதிகள் பரிமாற்றம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது 400-க்கும் மேற்பட்ட பாலஸ்தீன, லெபனான் கைதிகளும், பிற அரபு நாடுகளின் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

அந்த நேரத்தில், நஸ்ரல்லா முன்னெப்போதையும் விட மிகவும் சக்திவாய்ந்தவராகவும் செல்வாக்கு மிக்கவராகவும் கருதப்பட்டார். மேலும் லெபனான் அரசியலில் அவரது போட்டியாளர்களுக்கு அவரை எதிர்கொள்வதும் அவரது ஆதிக்கத்தையும் அவரது சக்தியையும் குறைப்பதும் ஒரு பெரிய சவாலாக மாறியது.

**ஹரிரியின் படுகொலை**

1983 இல் அப்போதைய லெபனான் பிரதமர் ரபிக் ஹரிரி படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாடு முழுவ



தும் அரசியல் தொடர்பான பொதுவான கருத்து மாறியது. ரபீக் ஹரிரி, ஹெஸ்பொலாவைத் தடுக்க முயன்ற சவூதி அரேபியாவிற்கு நெருக்கமான தலைவர்களில் ஒருவராக எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்.

ஹரிரியின் படுகொலைக்குப் பிறகு, ஹெஸ்பொலா மற்றும் சிரியா மீது சாமானிய மக்களின் கோபம் வேகமாக அதிகரித்தது. ஹரிரி கொலையில் ஹெஸ்பொலாவுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. பெய்ரூட்டில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்த பிறகு, சிரியாவும் லெபனானில் இருந்து தனது படைகளை திரும்பப் பெறுவதாக அறிவித்தது.

ஆனால் அதே வருடத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற போது ஹெஸ்பொலாவின் வாக்குகள் அதிகரித்தது மட்டுமன்றி இரண்டு அமைச்சர் பதவிகளையும் அந்தக் குழு கைப்பற்றியது.

இங்கிருந்து ஹசன் நஸ்ரல்லா ஹெஸ்புலாவை லெபனான் தேசியவாதக் குழுவாக உருமாற்றினார். அது மற்ற சக்திகளுக்கு முன்னால் தலைவணங்குவதில்லை என்ற அளவுக்கு தனது நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

2005 கோடையில், ஹெஸ்புலா போராளிகள் இஸ்ரேலுக்குள் நுழைந்து ஒரு ராணுவ வீரரைக் கொன்றதுடன் மேலும் இருவரைப் பிடித்துக்கொண்டனர். பதிலுக்கு, இஸ்ரேல் மிகப்பெரிய தாக்குதலை நடத்தியது. அத்தாக்குதல் 33-34 நாட்கள் தொடர்ந்தது. இந்த காலகட்டத்தில் சுமார் 1200 லெபனான் நாட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தப் போருக்குப் பிறகு, அரபு நாடுகளில் இஸ்ரேலுக்கு எதிராகப் போராடிய கடைசி நபராகத் திகழ்ந்த ஹசன் நஸ்ரல்லாவின் புகழ் மேலும் அதிகரித்தது.

**பலம் அதிகரிப்பு**

ஹெஸ்பொலாவின் அதிகாரம் அதிகரித்ததன் காரண




மாக, போட்டிக் குழுக்கள், குறிப்பாக லெபனான் அரசியல்வாதிகள், ஹெஸ்புலாவுக்கு எதிரான முயற்சிகளை தீவிரப்படுத்தினர்.

2007 ஆம் ஆண்டில், பல மாத அரசியல் குழப்பங்களுக்குப் பிறகு, லெபனான் அரசு ஹெஸ்பொலாவின் கட்டுப்பாட்டில் இருந்த தொலைத்தொடர்பு அமைப்பை அகற்றவும், தொலைத்தொடர்புகளை அரசின் ஒரே கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவும் முடிவு செய்தது. ஹசன் நஸ்ரல்லா இந்த முடிவை ஏற்கவில்லை என்பது மட்டுமல்லாமல், சிறிது காலத்திற்குள் அவரது ஆயுதக் குழு பெய்ரூட்டின் முழு கட்டுப்பாட்டையும் கைப்பற்றியது.

ஹசன் நஸ்ரல்லாவின் இந்த நடவடிக்கை மேற்கத்திய நாடுகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு அவர் லெபனான் அமைச்சரவையில் தனது குழுவின் அதிகாரத்தை அதிகரிப்பதிலும், அமைச்சரவை முடிவுகளில் வீட்டோ உரிமையைப் பெறுவதிலும் வெற்றி பெற்றார்.

2008 இல், லெபனான் பாராளுமன்றத்தில் ஹெஸ்புலாவின் இருக்கைகளின் எண்ணிக்கை குறைந்த போதிலும், நஸ்ரல்லா வீட்டோ அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதில் வெற்றி பெற்றார்.

அதே ஆண்டு, லெபனான் அமைச்சரவை தனது ஆயுதங்களை வைத்திருக்க ஹெஸ்பொலாவுக்கு அனுமதி வழங்கியது.

இந்த இடத்திலிருந்து தான் ஹசன் நஸ்ரல்லா ஒரு ஆளுமையாக உருவெடுத்தார். லெபனானின் அரசியல் உயரடுக்கினரிடையே கிட்டத்தட்ட எவரும் அவரது அதிகாரத்தைக் குறைப்பதில் வெற்றிபெறவில்லை.

அவரை எதிர்த்த பிரதமர்களின் ராஜினாமாவோ அல்லது சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானின் தலையீடுகளோ அவரைப் பின்னுக்குத் தள்ள முடியவில்லை. மாறாக, அந்த ஆண்டுகளில், ஈரானின் ஆதரவுடன், சிரிய உள்நாட்டுப் போர் மற்றும் லெபனானின் பொருளாதார நெருக்கடி போன்ற வரலாற்று நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதில் ஹசன் நஸ்ரல்லா வெற்றிகரமாக இருந்தார்.

63 வயதில், அவர் லெபனானில் ஒரு அரசியல் மற்றும் ராணுவத் தலைவராகக் கருதப்படுவதோடு மட்டுமல்லாமல், தனது அடிப்படை நோக்கங்களுக்காகவும் அவர் பல தசாப்தங்களாக கடுமையாகப் போராடி வருகிறார். ●